Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, SEPTEMBER 1, 2021

புதன்கிழமை செப்டெம்பர் 01, 2021 | ஒளி: 07 கதிர் 89 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# அவசரகால நிலை பிரகடனம்


## சிங்கள மொழியில் மட்டுமே வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது

நாடு பூராவும் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது நேற்று முன்தினம் (30) நள்ளிரவிலிருந்து அமுல்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் கட்டளையின் பிரகாரம், ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவின் கையொப்பத்தில், இதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த வர்த்தமானி அறிவித்தல், சிங்கள மொழியில் மட்டுமே வெளியாகியுள்ளது. அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டமைக்கு சட்டத்தரணிகள் பலர் கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



---

அதிபர், ஆசிரியர்களுக்கு ரூ.5,000 கொடுப்பனவு:

## வாங்கிக் கொண்டு ஒத்துழைக்கவும்



■ மகேஸ்வரி விஜயனந்தன்

வரவு- செலவுத்திட்டத்தை பாராளுமன்றத்தில் முன்வைக்கும் வரையிலும் அதிபர்-ஆசிரியர்களுக்காக 5,000 ரூபாய் மேலதிக கொடுப்பனவை வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக தெரிவித்த கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்தன, குறித்த கொடுப்பனவு, செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் ஆகிய இரண்டு மாதங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி ஆட்சியே நடக்கும்



நாட்டில் பிரப்பிக்கப்பட்டிருக்கும் அவசரகால நிலைமையின் ஊடாக ஜனாதிபதி ஆட்சியே நடக்கும். ஜனாதிபதி, தான்விரும்பிய படி அவசரகால விதிமுறைகளை வகுக்கமுடியும் என்று தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் எம்.பியுமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், அவற்றையெல்லாம் சட்டமாக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு சென்றடையும் என்றார்.

தொடர்ச்சி P2

## முதியோர் இல்லத்தில் 43 பேருக்கு கொரோனா

■ வி.நிதர்ஷன்



யாழ்ப்பாணம், கைதடி அரச முதியோர் இல்லத்தில் 43 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## காதில் பூ சுற்றும் செயற்பாடு



சம்பள பிரச்சினை உள்ளிட்ட தமது கோரிக்கைகள் தொடர்பிலான அமைச்சரவையின் தீர்மானங்களை நிராகரிப்பதாக தெரிவித்துள்ள அதிபர், ஆசிரியர் ஒன்றிணைந்த தொழிற்சங்கம், 5,000 ரூபாய் மேலதிக கொடுப்பனவானது, காதில் பூ சுற்றும் செயற்பாடாகும் என விமர்ச்சித்துள்ளன.

தொடர்ச்சி P2



வாரத்தில் 3 மணிநேரம்

## ஒன்லைன் விளையாட்டு

### சீனா அதிரடி: இன்று முதல் அமுல்

■ பீஜிங்

கையக்க தொலைபேசிகளில் விளையாட்டுகளுக்கு பேர் போனது சீனாதான். சீனாவின் பப்ஜி உள்ளிட்ட ஒன்லைன் விளையாட்டுகள், உலகளவில் பிரபலமாக உள்ளன. இந்த விளையாட்டுகள் பல இளைஞர்கள் குறிப்பாக சிறுவர்களை அடிமையாக்கி விடுகின்றன. இந்தப் பிரச்சினையை சீனாவும் எதிர்கொண்டு வருகிறது.

தொடர்ச்சி P2

## டொலர் எகிறியது; ரூபாய் சரிந்தது



ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி மீண்டும் பாரிய வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. இதற்கமைய, இலங்கை மத்திய வங்கி நேற்று (31) வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின்படி, ஐக்கிய அமெரிக்க டொலரின் விற்பனை விலை 204.89 ரூபாயாக அதிகரித்துள்ளது.

தொடர்ச்சி P2



## ஆப்கனை விட்டு அமெரிக்காவின் கடைசி வீரரும் வெளியேறினார்

### துப்பாக்கிகளால் சுட்டு, தலிபான்கள் மகிழ்ச்சி

20 ஆண்டுகளுக்குப்பின் அமெரிக்கா, ஆப்கனைவிட்டு வெளியேறி உள்ளது. அங்கு தங்கியிருந்த அமெரிக்காவின் கடைசி இராணுவ வீரர் மேஜர் ஜெனரல் கிறிஸ் டோனாஹூ, நேற்று (31) அதிகாலை 12 மணிக்கு முன் வெளியேறினார். இதை தலிபான்கள், வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடுகளை நடத்திக் கொண்டாடி வருகிறார்கள். இப்போது தான் முழுமையான சுதந்திரம் கிடைத்துள்ளதாக தலிபான்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## சிவப்பு சீனிக்கு நீண்ட வரிசை

சதொச மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களில் நேற்று (31) முதல் ஒரு கிலோகிராம் சிவப்பு சீனி 130 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது.




தொடர்ச்சி P2

## "சுரங்கி"க்கு இரட்டை பிரசவம்

### வரலாற்றில் பதிவு



பின்னவல யானைகள் சரணாலயத்தில் 'சுரங்கி' என்ற பெண் யானை, இரண்டு குட்டிகளை ஈன்றுள்ளது. அவை இரண்டும் ஆண் குட்டிகளாகும். முதல் குட்டி நேற்று (31) அதிகாலை 04 மணிக்கும் இரண்டாவது குட்டி காலை 10 மணிக்கு பிறந்ததாக சரணாலயம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

தொற்றாளர்கள் அதிகரிப்பு:

## யாழ். போதனாவில் நிரம்பி வழிகின்றனர்

■ எம்.றொசாந்த்




யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள கொரோனோ சிகிச்சை விடுதிகள் நிரம்பி வழிவதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

## போதைப்பொருள் கடத்தல் முறியடிப்பு

### 290 கிலோ ஹெரோய்னுடன் ஐவர் சிக்கினர்

கடற்படையினரின் உதவியுடன், போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் நேற்று (31) அதிகாலை முன்னெடுத்த திடீர் சுற்றிவளைப்பில், பேருவளையை அண்மித்த கடற்பரப்பில் 290 கிலோவும் 200 கிராமும் நிறையுடைய ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இதன்போது, படகு ஒன்றில் போதைப்பொருளை கொண்டுவந்த ஐவர், சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனக் கடற்படையினர் தெரிவித்தனர்.



தொடர்ச்சி P2

## திறப்பதா? தொடந்து மூடுவதா? அமைச்சரவையில் பேசவில்லை

■ மகேஸ்வரி விஜயனந்தன்

தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை நீடிப்பதா இல்லையா என்பது குறித்து நேற்று முன்தினம் (30) நடைபெற்ற அமைச்சரவை சந்திப்பில் எவ்விதமான கலந்துரையாடல்களும் முன்னெடுக்கப்படவில்லை என அமைச்சரும் அமைச்சரவை இணைப்பேச்சாளருமான ரமேஸ் பத்திரன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



நெல் பறிமுதல் என்ற போர்வையில்

## வடக்கு, கிழக்கு தமிழர்களின் பொருளாதாரம் அழிப்பு

### சாணக்கியன் எம்.பி சாடல்

■ வா.கிருஸ்ணா



நெல் பறிமுதல் என்ற போர்வையில், அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்பாடுகள் வடக்கு, கிழக்கு தமிழர்களின் பொருளாதாரத்தை அழிப்பதற்கான நடவடிக்கை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# அவசரகால நிலை பிரகடனம்

“ஜனாதிபதியின் கட்டளையின் பிரகாரம்” எனும் தலைப்பில் வெளியிடப்பட்டிருக்கும் அந்த அதிவி சேட வர்த்தமானி அறிவித்தலில், நாடு பூராவும் வெகுசீக்கிரமாகப் பரவிகொண்டிருக்கும் கொவிட்-19 நிலைகளின் பிரகாரம், இலங்கையில் பொதுமக்கள் அவசரகால நிலைமை ஏற்பட்டிருப்பதை கருத்தில்கொண்டு, மக்களின் பாதுகாப்பு மற்றும் நாட்டின் நிலைமையை பாதுகாப்பதற்காக, மக்களின் வாழ்க்கைக்குத் தேவையானதை விநியோகிப்பதற்காக, சேவைகளை வழங்குவதற்காக, இது முக்கியமான தருணமாகும்.

ஜனாதிபதியாகிய எனக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரம் மற்றும் கட்டளையின் பிரகாரம் அத்தியாவசிய பொருள்களை விநியோகம் செய்வதற்காக அவசர கால நிலைமை நாடளாவிய ரீதியில் ஒகஸ்ட் 30ஆம் திகதி முதல் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என அந்த விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## முதியோர் இல்லத்தில் 43 பேருக்கு கொரோனா



குறித்த முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு நேற்று (31) மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின் போதே, இந்த கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த முதியோர் இல்லத்தில் 45 முதியவர்கள் உள்ள நிலையில் 41 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளதுடன், முதியோர் இல்ல ஊழியர்கள் இருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## வாங்கிக் கொண்டு ஒத்துழைக்கவும்

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (31) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, மேற்படி விவகாரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

நாடு முகங்கொடுத்துள்ள கொரோனா தொற்றால் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியில், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களுக்காக மாதாந்தக் கொடுப்பனவாக இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதற்குத் தேவையான நிதியை ஒதுக்க நிதியமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவித்தார்.

அதேபோல், அதிபர்-ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்க நீண்ட காலமாக பல நிர்வாக பொறிமுறைக்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் அது நிரந்தரத் தீர்வாக அமையவில்லை. எனவே, 24 வருடங்களாக தீர்க்கப்படாதிருந்த இந்தப் பிரச்சினைக்கு, சமகால அரசாங்கம் முன்னெடுக்கும் தற்போதைய நடவடிக்கை தீர்வைப் பெற்றுக்கொடுக்க வழிவகுக்கும் என்றார்.

அதற்கமைய, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அமைச்சரவை உப-குழுவால் முன்வைத்த அறிக்கையின் பரிந்துரைகளின் இரண்டாவது காரணமாக அதிபர்- ஆசிரியர் சேவையை கட்டாய சேவையாக அறிவிக்கும் தேசிய தீர்மானத்தை செயற்படுத்துவது எதிர்வரும் சில மாதங்களில் முன்னெடுக்கப்படும் என்றார்.

எனவே, தற்போது காணப்படும் பிரச்சினைகள் மற்றும் 43 இலட்ச மாணவர்களின் எதிர்காலம் என்பவற்றை தீர்மானிப்பதில் ஆசிரியர்களின் பங்கு அளப்பரியது என்பதால், அவர்களால் எடுக்கப்படும் தீர்மானங்கள் மாணவர்களின் கற்றல் குறித்து இருக்கும் என தான் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சரவை எடுத்த தீர்மானத்துக்கு ஆசிரியர்-அதிபர்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

எனினும், அந்த 5,000 ரூபாய் கொடுப்பனவை ஆசிரிய தொழிற்சங்கங்கள் நிராகரித்துள்ளமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் தினேஸ் குணவர்தன, இந்தக் கொடுப்பனவு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான சுற்றறிக்கை இன்னும் வெளிவரவில்லை என்றும் அவை வெளிவந்த பின்னர் ஆசிரியர்கள் தமது மாணவர்களின் கல்வியை கருத்திற்கொண்டு தீர்மானங்களை மேற்கொள்வார்கள் என்றார்.

## ஜனாதிபதி ஆட்சியே நடக்கும்

ஜனாதிபதியின் செயலாளரின் கையொப்பத்துடன், நாடு பூராவும் அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்டிருக்கும் அதிவிசேட வர்த்தமானி தொடர்பில் கருத்துரைக்கும் போதே, தனது டுவிட்டர் பதிவில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த வீடியோ பதிவில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

உணவு விநியோகத்துக்கும் அத்தியாவசிய சேவைகளை முறையாக முன்னெடுப்பதற்கும் நேற்று முதல் (நேற்று முன்தினம் 30ஆம் திகதி) அவசரகால நிலைமை நாடு முழுவது பிரகடனப்படு த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

“நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து இருந்தால், அல்லது அதனோடிணைந்த சம்பந்தப்பட்ட விவகாரங்களுக்கு மட்டுமே இந்த சட்டத்தை பயன்படுத்த முடியும்“ என்றார்.

இதனால்தான், பொதுமக்கள் பொதுபாதுகாப்பு சுகாதார அவசரகால நிலைமைகள் சட்டத்தை உருவாக்குமாறு நான் கோரியியிருந்தேன். தனிநபர் பிரேரணையாக அதற்கான யோசனைகளை சமர்ப்பித்துள்ளேன். அதனை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருந்தது. எனினும், அவசரகால நிலைமை பிரகடனப்படு த்தப்பட்டுள்ளது.

இதனூடாக ஆபத்து உள்ளது. அதாவது ஜனாதிபதி ஆட்சியே நாட்டில் நடைபெறும். அவசரகால விதிமுறைகளை விரும்பியபடி வகுக்க முடியும் சட்டமாக்கவும் முடியும். ஆகையால், இச்செயற்பாட்டை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோ ம் என்றும் சுமந்திரன் எம்.பி மேலும் தெரிவித்தார்.

## வாரத்தில் 3 மணிநேரம் ஒன்லைன் விளையாட்டு

அந்நாட்டில் 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் பலரும் ஒன்லைன் விளையாட்டுகளில் மூழ்கிக் கிடப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. குறிப்பாக, வார விடுமுறை நாள்களில் சிறுவர்கள், கையடக்க தொலைபேசியே கதியாகக் கிடக்கின்றனர். இதனால், சிறுவர்கள் ஆன்லைன் விளையாட்டுக்கு அடிமையாவதைத் தடுக்க நாளை முதல் புதிய கட்டுப்பாட்டை சீன அரசு அறிவித்துள்ளது.

இதன்படி, வாரத்துக்கு 3 மணி நேரம் மட்டுமே இனி ஒன்லைன் விளையாட்டை விளையாட முடியும். வெள்ளிக்கிழமை மற்றும் வார இறுதி நாள்களில் இரவு 8 மணி முதல் 9 மணி வரை தலா ஒரு மணி நேரம் என 3 மணி நேரம் மட்டும் விளையாடலாம்.

ஒன்லைன் விளையாட்டை வழங்கும் நிறுவனங்கள், அதற்கான ஐடி முகவரிகளைக் கொண்டு இந்த நேரக் கட்டுப்பாட்டை அமுல்படுத்த வேண்டுமென சீன அரசு உத்தரவிட்டுள்ளது. இதனால் சிறுவர்கள் விளையாடும் நேரம் வெகுவாகக் குறையும் என ஒன்லைன் விளையாட்டு நிறுவனங்கள் கவலை தெரிவித்துள்ளன.

சிறுவர்கள் ஒரு நாளைக்கு ஒன்றரை மணி நேரமும் விடுமுறை நாள்களில் 3 மணி நேரமும் ஒன்லைன் விளையாட்டு விளையாடலாம் என சீன அரசு 2019இல் கட்டுப்பாடு விதித்தமை குறிப்பிடத்தக்கது.

## சிவப்பு சீனிக்கு...

இந்த நிலையில், மாளிகாவத்தை சதொச விற்பனை நிலையத்துக்கு முன்னால் சீனி கொள்வனவு செய்ய மக்கள் வரிசையில் காத்திருந்தனர்.

இதேவேளை, வெள்ளை சீனியின் விலை இந்த வாரத்தில் இருந்து படிப்படியாக குறைவடையும் என சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்திருந்தார்.

## காதில் பூ சுற்றும் செயற்பாடு

2022ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் வரையிலும் செப்டம்பர், ஒக்டோபர் மாதங்களுக்காக 5,000 ரூபாயை மேலதிக கொடுப்பனவை வழங்க, அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

அத்துடன், வரவு -செலவுத்திட்டத்தினூடாக கட்டம் கட்டமாக சம்பள அதிகரிப்பை அமுல்படுத்துவதற்கும் அமைச்சரவை அனுமதியளித்திருந்தது.

எனினும், சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட தமது கோரிக்கைகள் தொடர்பிலான அமைச்சரவையின் தீர்மானங்களை ஒன்றிணைந்த தொழிற்சங்கள் அறிவித்துள்ளது.

தமது கோரிக்கைகளை முன்வைத்து, இணையவழி கற்பித்தலையும் புறக்கணித்துள்ள இந்தத் தொழிற்சங்களைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்கள், அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து விரைவில் அறிவிப்பதாகவும் அறிவித்துள்ளன.

## டொலர் எகிறியது...

இலங்கையில் இதுவரையில் பதிவான அமெரிக்க டொலரின் மிக உயர்ந்த விற்பனை விலை இதுவாக உள்ளது. இதற்கு முன்தாக ஐக்கிய அமெரிக்க டொலரின் அதிக பட்ச விற்பனை விலையாக 204.62 ரூபாய் 2021 ஏப்ரல் 15ஆம் திகதி பதிவாகியிருந்தது.

அதேவேளை, நேற்றையதினம் டொலரின் கொள்வனவு விலை 198.90 ரூபாயாக இருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

## ஆப்கனை விட்டு...

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு எதிராக கடந்த 20 ஆண்டுகளாக செய்த போர் முடிவுக்கு வந்துவிட்டதாக அமெரிக்காவின் பெண்டகன் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

அமெரிக்க இராணுவத்தின் கடைசி விமானம், காபூலில் உள்ள ஹமீது கர்சாய் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றது.

2001ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இரட்டை கோபுரத்தை அல்கொய்தா தீவிரவாதிகள் தகர்த்தனர். அந்தத் தாக்குதலுக்குக் காரணமான அல்கொய்தா தீவிரவாதிகளை அழிக்க அமெரிக்கா உறுதிபூண்டது.

அல் கொய்தா தீவிரவாதிகளுக்கு ஆப்கானிஸ்தானில் அடைக்கலம் கொடுத்திருந்த தலிபான்கள் மீது போர் தொடுத்து, அவர்களின் ஆட்சியை அமெரிக்கப் படைகள் அகற்றின. ஜனநாயக ரீதியிலான அதிபர் தேர்தல் நடத்தி, புதிய அரசியலமைப்புச் சட்டம் நிறுவப்பட்டது.

ஆனால், தோல்வி கண்ட தாலிபான்கள் மெல்ல தங்களைப் பலப்படுத்திக் கொண்டனர். யுத்தம் ஆண்டுக்குக் கணக்கில் நீண்டது. தலிபான்கள் தங்கள் எதிர்ப்பை வலுப்படுத்தினர்.

## சுரங்கிக்கு...

இலங்கை வரலாற்றில் பதிவு செய்யப்பட்ட முதல் இரட்டை யானைக் குட்டிகள் பிறப்பு இதுவாகும் என்பது குறிப்பிட்டத்தக்கது. யானைகள் பெரும்பாலும் ஒரேயொரு குட்டியை ஈனும்.

## யாழ். போதனாவில்...

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, தெல்லிப்பழை, பருத்தித்துறை மற்றும் சாவகச்சேரி வைத்தியசாலைகள் ஆகியவற்றில், கொவிட்-19 சிகிச்சைப் பிரிவுகள் அமைக்கப்பட்டு, கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், நேற்று முன்தினம் (30) நிலைவரம் படி, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில், 129 தொற்றாளர்கள் சிகிச்சை பெற்றுவருகின்றனர். அத்துடன், அங்கு அமைக்கப்பட்டுள்ள 2 அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளில், 10 தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனா மரணங்களும் அதிகரித்துள்ள நிலையில், தினமும் 5 சடலங்கள், யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன.

மேலும், அந்தச் சடலங்கள், கோம்பயன் மணல் மயானத்தில் சுகாதார விதிமுறைகளின் கீழ் எரியூட்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## போதைப்பொருள்...

கைது செய்யப்பட்டவர்கள், அஹுங்கல்லா, பலபிட்டிய மற்றும் ஹபராதுவ பகுதிகளைச் சேர்ந்த 31 வயதுக்கும் 37 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் ஆவர்.

10 உரைப்பைகளில் 259 பொதிகளாகக் கைப்பற்றப்பட்டுள்ள ஹெரோய்ன் போதைப்பொருளின் உள்நாட்டு பெறுமதி 2,321 மில்லியன் (232 கோடி) ரூபாய்க்கும் அதிகம் என்றும் தெரிவித்த கடற்படையினர், இதை ஏற்றிவந்த பல நாள் மீன்பிடிப் படகையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்தப் பல நாள் மீன்பிடிப் படகு, கடந்த ஜுலை 30ஆம் திகதி பயணத்தை ஆரம்பித்துள்ளதாக ஆரம்ப விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

சர்வதேச போதைப்பொருள் வியாபாரிகளிடமிருந்து இந்த ஹெரோய்ன் போதைப்பொருளை இலங்கைக்கு கொண்டு வரும் நோக்கில், இந்தப் படகு செயற்படுத்தப்பட்டுள்ளதாக கடற்படையினர் சந்தேகிக்கின்றனர்..

கைதுசெய்யப்பட்ட ஐவரும், போதைப்பொருள்களுடன் பேருவளை துறைமுகத்தில் வைத்து போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## வடக்கு, கிழக்கு தமிழர்களின்...

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், நேற்று (31) அவரை சந்தித்து, தமது பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினார்கள்.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்டத்தில் பரம்பரை பரம்பரையாக தாங்கள் விவசாயம் செய்துவரும் நிலையில், நெல்லையும் சேமித்து அதனை உரிய காலத்தில் பயன்படுத்திவரும் நிலையில், இன்று அந்த நெல்லை பறிமுதல் செய்யும் பணிகளை அதிகாரிகள் முன்னெடுத்துவருவதால் தாம் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

அறுவடை செய்யும் நெல்லை உடனடியாக உரிய விலைக்கு விற்பனை செய்யமுடியாத காரணத்தாலும் அடுத்த விவசாய செய்கைக்குத் தேவையான முளை நெல்லுக்காகவும் நெல் சேமித்துவைக்க ப்படுவதாகவும் உரிய காலத்தில் நல்ல விலை கிடைக்கும்போது, அவை விற்பனை செய்யவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், இன்று அவ்வாறு நெல்லை வைக்கமுடியாது என விவசாயிகளின் களஞ்சியங்களை முற்றுகையிடும் நுகர்வோர் அதிகார சபையினரால் அவை சீல் வைக்கப்படுவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து கருத்துத் தெரிவித்த சாணக்கியன் எம்.பி, பாரியளவிலான நெல்லை பதுக்கிவைத்திருக்கும் முதலாளிகளை விட்டுவிட்டு

## திறப்பதா? தொடந்து...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (31) இடம்பெற்ற, அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

உலக சுகாதார ஸ்தாபனம், விசேட வைத்தியர்கள் மற்றும் உள்நாட்டிலுள்ள வைத்திய நிபுணர்களின் ஆலோசனைக்கமையவே அரசாங்கம் செயற்படும் என்றார்.

அரசாங்கம் என்ற ரீதியில் கொரோனா ஒழிப்பு செயற்பாடுகளுக்கு அதி உயரிய ஒத்துழைப்பை வழங்கும் அதேவேளை, மக்களின் சமூக பொருளாதார மற்றும் வாழ்வாதாரம் குறித்தும் ஆராயும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது என்றார்.

எனவே, இது தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் போது அனைத்து விதத்திலும் ஆராய்ந்து தான் கொரோனா ஒழிப்பு செயலணி, ஜனாதிபதி உள்ளிட்டவர்கள் தீர்மானங்களை எடுக்கின்றனர் என்றார்.

பொருளாதார நெருக்கடிக்கு

# ‘கொரோனா காரணமில்லை பொருளாதார கொள்கையே காரணம்’

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்குக் கொரோனா வைரஸ் காரணமில்லை என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க எம்.பி கருத்துத் தெரிவிக்கையில்;

அரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கையே பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் எனத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸுக்கு முன்னர் நாட்டுக்குக் கிடைத்து வந்த வருமானம் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் குறைவடைந்துள்ளதாகவும், பாரியளவில் வர்த்தக செயற்பாடுகளை முன்னெடுக்கும் வர்த்தகர்களின் கோரிக்கை ஏற்ப “வற்” வரியை அரசாங்கம் குறைத்தமையே



அரசாங்கத்தின் வருமானம் பாரியளவில் குறைவதற்கான காரணம் எனவும் தெரிவித்தார்.

கடன் செலுத்தும் நிதியைத் தவிர ஏனைய செலவுகளுக்கு நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் அரசாங்கத்திடம் வருமானம் இருந்ததாகவும் தெரிவித்தார்.

வரியைக் குறைக்க வேண்டுமென மக்கள் ஒருபோதும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கவில்லை. பணம் அச்சிடப்பட்டதால் வாழ்க்கை செலவு அதிகரித்துள்ளது. கொரோனா வைரஸ் ஒழிப்புப் பணிகளுக்காக சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 72 கோடி டொலர்களை வழங்கியுள்ளது. கொரோனா பணிகளுக்கு இதனை செலவு செய்துவிட்டு பணம் மிஞ்சுமாக இருந்தால் அதனை வேறு செயற்பாடுகளுக்கு செலவிட முடியும் எனவும் ரணில் தெரிவித்துள்ளார்.

நாட்டில் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதற்கு அந்நிய செலாவணி போதியளவில் கிடைக்காமையே காரணம். இதற்கு சில நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாக இருந்தால் சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதே சிறந்து எனவும் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

# அசாத் சாலி தொடர்ந்தும் விளக்கமறியலில்

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலியை எதிர்வரும் 14 ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சர்ச்சைக்குரிய கருத்தொன்றை வெளியிட்டதன் காரணமாக கைது செய்யப்பட்ட அசாத் சாலி மீதான வழக்கு, கொழும்பு பிரதான நீதவான் புத்திக ஸ்ரீ ராகல முன்னிலையில் நேற்று (31) விசாரணைக்கு வந்தது.



அதன்போது, அவரை மீண்டும் விளக்கமறியல் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த மார்ச் 9 ஆம் திகதி இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் சர்ச்சையான கருத்தொன்றை வெளியிட்டமை தொடர்பில், மார்ச் 16 ஆம் திகதி குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் முன்னாள் ஆளுநர் அசாத் சாலி, கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஓமானுக்கான இலங்கைத் தூதுவர்;

# யெமனுக்கான இலங்கை தூதுவராகவும் பதவியேற்பு



ஓமான் நாட்டுக்கான தற்போதைய இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத், யெமன் நாட்டுக்கான இலங்கைத் தூதுவராகவும் பதவியேற்றுள்ளார்.

இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ நியமன ஆவணங்களை யெமன் நாட்டு ஜனாதிபதி அப்துல் றப்புஹ் மன்சூர் அல்ஹாதியிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார். சவூதி அரேபியாவின் தலைநகர் றியாதில் அமைந்துள்ள யெமன் நாட்டு ஜனாதிபதியின் தற்காலிக அரச மாளிகையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் இலங்கைத் தூதுவர் அமீர் அஜ்வத் தனது பாரியார் அஸ்மியா அமீர் அஜ்வத் சகிதம் கலந்து கொண்டார். அவுஸ்திரேலியா, நியூசீலாந்து, இந்தோனேசியா, துருக்கி மற்றும் மொரிடானியா ஆகிய நாடுகளின் புதிய தூதுவர்களும் தங்களின் நியமன ஆவணங்களை ஜனாதிபதி அல் ஹாதியிடம் இவ்வைபவத்தின் போது கையளித்தனர்.

இந்நிகழ்வில் யெமன் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் அஹ்மட் அவாட் பின் முபாரக், ஜனாதிபதி உபசரிப்புத் தலைமை அதிகாரி முஹம்மத் ஹஜ் மஹ்பூத் மற்றும் யெமன் அரச உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

யெமன் நாட்டுக்கான இலங்கையின் புதிய தூதுவர் அமீர் அஜ்வத்தை வரவேற்ற யெமன் ஜனாதிபதி அல்ஹாதி, இருதரப்பு உறவுகளை மேலும் வளர்ப்பதில் தனது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும் தூதுவரின் பணிகள் வெற்றிகரமாக அமைய தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக

# பொலிஸ் மோட்டார் சைக்கிள் திருட்டு

நவகமு பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்ட பொலிஸ் மோட்டார் சைக்கிளை திருடிச் சென்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தால் பொலிஸ் சேவைகளை முன்னெடுப்பதற்காக வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிளை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள வீதி அருகில் நிறுத்தி வைக்கப்பட்டு சென்ற நிலையில், குறித்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

இதேவேளை, பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள வர்த்தக நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள



சீ.சீ.ரி.வி கமராவில் பதிவாகியிருந்த வீடியோ உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்தப் பொலிஸார், மோட்டார் சைக்கிளை திருடிய நபரை கைது செய்துள்ளனர்.

இதேவேளை, குறித்த மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்திய பொலிஸ் அதிகாரி நவகமு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளனர்.

# ‘தடுப்பூசி போட்டு முடியும் வரை பொறுமையாக இருங்கள்’

நாடு இன்னும் சிறிது காலத்துக்கு தொடர்ந்து முடக்கப்பட்டிருந்தால் நல்ல பிரதிபலன் கிடைக்கும் என ராகம வைத்தியபீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் அர்ஜுன டி சில்வா தெரிவித்தார்.

எனினும் நாட்டை தொடர்ந்து முடக்கி வைத்திருந்தால், பொருளாதார பாதிப்புக்கள் ஏற்படும் என்பதை தான் ஏற்றுக்கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த ,ராகம வைத்தியபீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் அர்ஜுன டி சில்வா;

தற்போது நாடு முடக்கப்பட்டிருப்பதால் நிச்சயமாக நல்ல பிரதிபலன்கள் கிடைக்கும். எனினும் இன்னும் சிறிது காலத்துக்கு தொடர்ந்து முடக்கி வைத்திருந்தால், முழுமையான பிரதிபலன்கள் கிடைக்கும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அம்மை நோயால் மக்கள் உயிரிழப்பதில்லை என்றாலும், டெல்டா வைரஸால் மக்கள் உயிரிழப்பார்கள். எனினும் அம்மை நோய்க்கு பயம் டெல்டாவுக்கு பயமில்லை என்பதுபோலவே சிலர் நடந்துக்கொள்வதாகவும் ராகம வைத்தியபீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் அர்ஜுன டி சில்வா தெரிவித்தார்.



நாட்டு மக்களில் நூற்றுக்கு 80 சதவீதமானவர்கள் தடுப்பூசி போட்டுக் கொள்ளும் வரையில் மக்கள் பொறுமையாகச் செயற்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது கேட்டுக்கொண்டார்.

# சீனியின் விலையைக் குறையுங்கள்

சீனியின் விலையை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.அத்துடன் , சீனி ஒரு கிலோ கிராமை 90 ரூபாய்க்கு விற்பனை செய்ய வேண்டும் எனவும் ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன வலியுறுத்தியுள்ளார்.

கட்சி செயற்பாட்டாளர்களுடன் இணைய வழியில் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலில் தொடர்ந்து கருத்துரைத்த பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, உலக சந்தையில் சீனி ஒரு கிலோ கிராமின் விலை ஒரு டொலராகக் காணப்படுகிறது. ஒரு கிலோ கிராம் சீனி இந்தியாவில் வெறும் முப்பது ரூபாய்க்கே விற்பனை செய்யப்படுகிறது.

சீனி பதுக்கி வைத்திருப்பவர்களுக்கு எதிராக விசேட சோதனை நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டுமெனவும், எவ்வாறாயினும் அரசாங்கம் இந்த நாட்களில் மௌனமாகவே இருப்பதாகவும் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார். சீனியின் இறக்குமதி வரி குறைக்கப்பட்டதால் சீனியை பதுக்கி வைத்திருக்கும் வர்த்தகர்கள் பாரியளவில் வருமானத்தை ஈட்ட அரசாங்கம் வழி செய்துள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

அரசாங்கம் மருந்து பொருள்களின் விலைகளையும் அதிகரித்துள்ளது. மருந்து பொருள்களை பயன்படுத்துவதைக் குறைப்பதற்காகவா மருந்து பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது கேள்வி எழுப்பினார்.



தவறான பொருளாதாரக் கொள்கை;

# பட்டினியால் மக்கள் பலியாகும் நிலை

கொரோனா வைரஸால் மக்கள் உயிரிழப்பதுபோல, ராஜபக்‌ஷக்களின் தவறான பொருளாதாரக் கொள்கையால், பட்டினியால் மக்கள் உயிரிழக்கும் நிலைமை ஏற்படுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி விஜேவர்தன;

கொரோனா வைரஸால் நாட்டு மக்கள் உயிரிழந்து வரும் நிலையில், மக்களின் கழுத்தை மேலும் நெறிக்க அரசாங்கம் முயற்சிக்கிறது எனவும் தெரிவித்தார்.

பால் சொதி ஒன்றை சமைத்து வாழ முடியாத நிலைக்கு அரசாங்கம் மக்களை தள்ளியுள்ளது. அத்தியாவசிய பொருள்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளது.

சீனி வரிக்குறைப்பால் அரசாங்கத்துக்கு 1,590 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டது.



தற்போது 25 சத வரிக்குக் கொண்டுவரப்பட்ட சீனியே நாட்டில் உள்ளது. அவ்வாறு இருக்கையில் சீனியை எவ்வாறு நினைத்த விலைக்கு விற்பனை செய்ய முடியும் எனவும் தெரிவித்தார்.

ஒவ்வொருவரும் நினைத்துபோல் பொருள்களின் விலையை அதிகரிக்கிறார்கள். அரசாங்கத்தின் வருமானத்தை இல்லாதொழித்துவிட்டு உலகம் முழுவதிலும் அரசாங்கம் கடன்வாங்கி திரிவதாகவும் தெரிவித்தார். நாட்டு மக்களின் உயிர்களோடு விளையாட வேண்டாம் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

# மோசடி வியாபாரிகளிடமிருந்து மக்களை பாதுகாக்க வேண்டும்

மோசடி வியாபாரிகளின் பிடியிலிருந்து, மக்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம், மொத்த விற்பனையில் தலையிட வேண்டும் என நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

தற்பொழுது அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்து வருவது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்;

நாட்டில் நிலவி வரும் தொற்று நோய் நிலைமையிலும் மோசடி வியாபாரிகள், அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகளை அதிகரித்து பொதுமக்களை கஷ்டத்துக்கு உள்ளாக்கி, அதன்மூலம் அரசாங்கத்துக்கு எதிரான அரசியல் செயற்பாட்டுக்கு வழிவகுக்கின்றனர்.

இந்தமுறை நாட்டை முடக்குவதற்கு எடுத்த தீர்மானத்துக்கு முன்னரும் பல நகரங்களில் நுகர்வுப் பொருட்கள் விற்பனை நிலையங்களில் காணப்பட்ட விலைகள் தொடர்பில் தான் தனிப்பட்ட ரீதியில் கண்டறிந்ததாகவும் இதன்போது அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார்.



சில வர்த்தகர்கள் தாம் நினைத்த வகையில் விலைகளை அதிகரித்து விற்பனை செய்வதை இதன்போது காணமுடிந்தது எனவும் நாட்டை முடக்கியதன் பின்னர் இந்த நிலைமை மேலும் மோசமடைந்துள்ள தாகவும் அவர் கூறினார்.

இவ்வாறு விலைகளை அதிகரிப்பது தொடர்பில், அமைச்சரவைக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து, உடனடியாக அரசாங்கம் தலையிட்டு களஞ்சியசாலைகளில் மறைத்து வைத்துள்ள அரிசி மற்றும் சீனி வர்த்தகர்களுக்கு எதிராக நுகர்வோர் அதிகார சபையின் மூலம் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளமை பாராட்டத்தக்கது. இதற்கு மக்கள் மத்தியிலும் வரவேற்பு ஏற்பட்டுள்ளது எனவும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

# மெனிங் சந்தை, பொருளாதார மத்திய நிலையங்கள் திறப்பு

நாட்டிலுள்ள அனைத்து விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் கொழும்பு மெனிங் சந்தை ஆகியன இன்றும் நாளையும் திறக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, மொத்த வர்த்தகத்துக்காக இவ்வாறு திறக்கப்பட வுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் அமுலிலுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு காரணமாக, அனைத்து பொருளாதார



மத்திய நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. இதனால் அத்தியாவசிய பொருட்களை மக்களுக்கு பெறக்கூடியவதற்காகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கர்ப்பிணிகளுக்கு ஓர் அறிவிப்பு

இதுவரையில் 4,200 கர்ப்பிணிப் பெண்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக குடும்ப நல சுகாதாரப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சித்ரமலி டி சில்வா தெரிவித்தார்.

தற்போது 900 கர்ப்பிணிப் பெண்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சைப் பெற்றுவருகிறார்கள். 32 பேர் இதுவரையில் தொற்றால் உயிரிழந்துள்ளதாகவும் சித்ரமலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதுவரையில் 75 சதவீதமான கர்ப்பிணிப் பெண்களுக்குக் கொரோனா



வைரஸ் தடுப்பூசிகள் செலுத்தப்ப ட்டுள்ளதாகவும், கர்ப்பிணிப் பெண்கள் அனைவரும் அருகில் உள்ள தடுப்பூசி மையங்களுக்குச் சென்று தடுப்பூசிகளைக் செலுத்திக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

சன நெருக்கடியுள்ள பிரதேசங்கள், கொரோனா வைரஸ் அறிகுறிகள் கொண்டோருடன் பழகுவதைத் தவிர்க்க வேண்டும் எனவும் அவர் இதன்போது மேலும் தெரிவித்தார். கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட கர்ப்பிணிப் பெண்கள் வைத்திய ஆலோசனையின்படியே வீட்டில் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தினார். அத்தோடு, கொரோனா வைரஸ் தொற்றாளர்களிடமிருந்து முடிந்தளவு விலகியிருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

பூந்தோட்டம் மயானம் செயலிழப்பு:

# சடலங்கள் தேங்குகின்றன

## 'இயந்திரத்தைப் பழுதுபார்க்க கூடியவர்கள் வவுனியாவில் இல்லை'

■ க. அகரன்

வவுனியா - பூந்தோட்டம் மயானத்தில் உள்ள மின் தகன இயந்திரம் பழுதடைந்துள்ளமையால், கொரோனா சடலங்கள் எரியூட்டப்படாமல் தேங்கும் நிலை காணப்படுவதாக, வவுனியா நகரசபை தவிசாளர் தேசபந்து இ.கௌதமன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், வட மாகாணத்தை பொறுத்தவரையில், கொரோனா மரணங்கள் அதிகரித்துள்ள நிலையில், வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் மாத்திரமே எரிவாயு மயானங்கள் இயங்கி வருகின்றன என்றார்.

இந்நிலையில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் கொரரோனாவால் உயிரிழப்போரின் சடலங்கள் வவுனியா - பூந்தோட்ட மயானத்திலேயே எரியூட்டப்பட்டுகின்றன எனத் தெரிவித்த அவர், தற்போதைய நிலையில் அதிகளவான மரணங்களால், பூந்தோட்ட மயானம் 24 மணித்தியாலங்களும் இயங்கும் மயானமாக செயற்பட்டு வருகின்றது எனவும் இதனால் தாம் பாரிய சவால்களையும் சிரமங்களையும் எதிர்கொள்கின்றோம் எனவும் கூறினார்.

அதிகளவான சடலங்களால் தமது மயானத்தின் தன்மை மற்றும் வினைத்திறன் குறைந்து செல்வதாகத் தெரிவித்த அவர், ஞாயிற்றுக்கிழமை (29) காலை 8 மணி முதல் மறுநாள் (30) அதிகாலை 4 மணிவரை மாத்திரம், 11 சடலங்களை எரியூட்டியிருந்ததாகவும்



இதற்கு மேலதிகமாக நேரப் பற்றாக்குறையால் வவுனியா வைத்தியசாலையில் சடலங்கள் இன்னும் எரியூட்டப்படாமல் உள்ளன எனவும் கூறினார்.

> ஞாயிறு (29) காலை 8 மணி முதல் மறுநாள் (30) அதிகாலை 4 மணிவரை மாத்திரம், 11 கொரோனா சடலங்கள் இந்த மின் மயானத்தில் எரியூட்டப்பட்டுள்ளன

'இந்த நிலையில், நேற்று முன்தினம் (30) காலை மயானத்தில் உள்ள மின்தகன இயந்திரம் செயலிழந்துள்ளது.

எனினும், இதனை மீள இயக்குவதற்கான முயற்சியை எடுத்து வருகின்றோம். இந்த இயந்திரத்தைப் பழுதுபார்க்க கூடியவர்கள் எவரும் வவுனியாவில் இன்மையால் கொழும்பில் இருந்தே வரவேண்டியுள்ளது.

'ஒருநாள் எமது மயானம் இயங்காது விடும் பட்சத்தில், சடலங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டே போகின்றது' எனவும், தவிசாளர் கூறினார்.

மன்னாரில்

## 'மின்தகன நிலையம் அமைக்க தீர்மானம்'

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில், கொரோனா மரணங்கள் அதிகரித்துள்ள நிலையில், சடலங்களை வவுனியாவில் உள்ள மின் தகன நிலையத்துக்குக் கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக, மன்னார் மாவட்டச் செயலாளர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேல் தெரிவித்தார்.

இந்நிலையில், மன்னார் மாவட்டத்தில் உடனடியாக மின் தகன நிலையத்தை அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதற்கு மாவட்டத்தில் உள்ள அனைவரின் ஒத்துழைப்பும் தேவை எனவும், அவர் கூறினார்.

மாவட்டச் செயலகத்தில், நேற்று (31) நடைபெற்ற அவசர கலந்துரையாடலை தொடர்ந்து, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர்,



தற்போதைய சூழ்நிலையில், வவுனியாவிலும் கொரோனா மரணங்கள் அதிகரித்துள்ள நிலையில், ஏனைய மாவட்டங்களில் இருந்தும் சடலங்கள் தகனம் செய்ய வவுனியாவுக்கு கொண்டு செல்லப்படுவதால், வவுனியாவில் உள்ள மின் தகன இயந்திரத்தின் செயல்திறன் குறைவடைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த நிலமையால், முன் அனுமதியின்றி சடலங்களை வவுனியா தகன நிலையத்துக்கு கொண்டு வர வேண்டாமென தங்களுக்கு தெரியப்படுத்தி உள்ளதாகத் தெரிவித்த அவர், இந்த நிலையில், மன்னார் மாவட்டத்தில், உடனடியாக மின் தகன நிலையத்தை அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார்.

'இதற்கமைய, மன்னார் நகரசபை பிரிவில் உள்ள மன்னார் பொது மயான பகுதியில் மின் தகன நிலையத்தை அமைக்க முடிவு செய்துள்ளோம்.

'மின் தகன நிலையத்தை அமைப்பதற்கும் வாகனத்துக்கு பணம் கொடுத்து சடலங்களை அனைவராலும் ஏற்றி வர முடியாது என்பதால் வாகனம் ஒன்றை கொள்வனவு செய்யவும், சுமார் 30 மில்லியன் ரூபாய் நிதி தேவைப்படுகிறது. அதனால், தேவையான நிதியை பெற்றுக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்" என்றார்.

# மட்டக்களப்பில் தொற்று தீவிரம்

## நாளொன்றில் 300 தொற்றாளர்களும் ஐந்து மரணங்களும் பதிவு

■ கே.எல்.ரீ.யுதாஜித் , எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பில் சராசரியாக புதிய தொற்றாளர்களாக 300 பேருக்கு மேற்பட்டவர்கள் இனங்காணப்படுவதோடு, சராசரியாக ஐந்துக்கு மேற்பட்ட மரணங்களும் சம்பவித்து வருகின்றன என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் என்.மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பின் கொவிட் நிலைமைகள் தொடர்பில் நேற்று (31) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலயத்தில் 257 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், இருவர் மரணமடைந்துள்ளனர்.

"தொற்றுக்குள்ளானவர்கள், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 75 பேரும், களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 78 பேரும், வெல்லாவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 41 பேரும், பட்டிப்பளை, வவுணதீவு, ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா 10 பேரும், காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 08 பேரும் அடங்குகின்றனர்.

"அத்துடன், கோரளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில்



இருவரும், வாழைச்சேனை, வாகரை, கிரான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இருந்து தலா ஒருவரும் அடையாளம் காணபப்பட்டுள்ளனர்.

"மரணமடைந்தவர்களில் ஒருவர், காத்தான்குடியைச் சேர்ந்தவர். மற்றையவர் வவுணதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளைச் சேர்ந்தவர் ஆவார்.

"மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை மொத்தமாக 223 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன. அவர்களில் 20 வயதுக்குட்பட்ட எவரும் மரணிக்கவில்லை. 20 தொடக்கம் 40 வயதுக்குட்பட்ட 09 பேரும், 40 தொடக்கம் 60 வயதுக்குட்பட்ட 66 பேரும், 60 வயதுக்கு மேற்பட்ட 147 பேரும் மரணமடைந்துள்ளனர். மரணமடைந்தவர்களில் 53 சதவீதமானவர்கள் ஆண்களேயாவர்" என்றார்.

## தொடர் சோதனை நடவடிக்கை முன்னெடுப்பு



■ வா.கிருஸ்ணா

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் அதனை மீறுவோரை கண்டறியும் வகையிலான தொடர்ச்சியான சோதனை நடவடிக்கைகள் நேற்றும் (31) முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் பொதுமக்களின் பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாக, கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதில் சுகாதாரத் துறையினர் பல சவால்களை எதிர்கொண்டுவருகின்றனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்காரணமாக, தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தினையும் மீறி செயற்படுவோரை கண்டறியும் வகையில், மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட புறநகர்ப் பகுதிகளில் பொலிஸாரும் மட்டக்களப்பு மாநகர சபை ஊழியர்களும் இணைந்து விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

கூழாவடி, இருதயபுரம், மாமாங்கம், புன்னைச்சோலை மற்றும் பாலமீன்மடு ஆகிய பகுதிகளில் இந்த விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, தேவையற்ற நிலையில் திறக்கப்பட்டிருந்த வர்த்தக நிலையங்கள் பொலிஸாரால் மூடப்பட்டதுடன், அநாவசியமாக நடமாடியவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டு திருப்பி அனுப்பிவைக்கப்பட்டன.

பாலமீன்மடு மீன்சந்தையில் நேற்றைய தினம் அதிகளவான கூட்டம் கூடியிருந்த நிலையில், பொலிஸார் அவர்களை கடுமையான எச்சரிக்கைசெய்து திருப்பியனுப்பியதுடன், அங்கு வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டவர்களையும் அங்கிருந்துசெல்லுமாறு எச்சரித்தனர்.




மன்னாரிலும்

## வீடுகளில் தீபம் ஏற்றி கவனயீர்ப்பு

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தையொட்டி, நீதியை வலியுறுத்தி, மன்னார் மாவட்டத்தில் இருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இணைந்து, மன்னாரில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில், நேற்று முன்தினம் (30) இரவு, தீபம் ஏற்றி கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கொரோனா முடக்க நிலை காரணமாக, தத்தமது வீடுகளில் இருந்தவாறே, வலிந்து காணாமல் ஆக்கப்பட உறவுகளுக்கு நீதி வேண்டியும், காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்கு விரைவில் இந்த அரசாங்கம் பதில் வழங்க வேண்டும் என கோரியும் வீடுகளில் தீபம் ஏற்றி, கவனயீர்ப்புப் போராட்டத்தில்



ஈடுபட்டனர். அதேநேரம், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் சர்வதேசம் தலையிட்டு, யுத்த காலப் பகுதியிலும் அதற்கு முன்னரும் இலங்கை அரசாங்கத்தால் கடத்தப்பட்ட மற்றும் சரணடைந்த தங்கள் உறவுகளுக்கு நியாயத்தை பெற்றுத்தர வேண்டும் எனவும், அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

எஸ்.றொசேரியன் லெம்பேட்



## வயோதிபர்களின் கவனத்துக்கு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு மாவட்டத்தில், நடமாடும் சேவை மூலமான தடுப்புசி தேவைப்படும் 60 வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்கள், அந்தந்த உதவி பிரதேச செயலகங்கள் கிராம சேவையாளர்கள், சுகாதார பணியாளர்கள் மற்றும் மாவட்டச் செயலகம் அல்லது முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையகம் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்த்தில், கடந்த வாரம் முதல் 60 வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், ஊனமுற்றோர் மற்றும் பலவீனமானவர்களுக்கு இராணுவ வைத்திய படையினருடன் இணைந்து 57ஆவது, 59ஆவது, 64ஆவது, 66ஆவது மற்றும் 68ஆவது படைப்பிரிவுகளின் படையினர், நடமாடும் தடுப்பூசி வழங்கும் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வியாபாரிகள் விரட்டியடிப்பு

■ எம். றொசாந்த், என்.ராஜ்

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருநெல்வேலி சிவன் அம்மன் கோவிலுக்கு அருகில், நேற்று (31), பயணத் தடையை மீறி மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள், கோப்பாய் பொலிஸாரால் விரட்டப்பட்டனர்.

அவ்விடத்தில் மரக்கறி வியாபாரிகள் ஒன்றுகூடி வியாபாரத்தில் ஈடுபட்டதால், அங்கு பொதுமக்கள் ஒன்றுகூடி, மரக்கறிகளை கொள்வனவு செய்யும் நிலைமை காணப்பட்டது.

இது தொடர்பில்



கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து, ஸ்தலத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார், அவ்விடத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டவர்களை அங்கிருந்து விரட்டினர்.

பொதுசுகாதார பரிசோதகரை

## அச்சுறுத்திய இருவருக்கு மறியல்

■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு - முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதறிகுடா பகுதியில், பொது சுகாதார பரிசோதகரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் அச்சுறுத்தியமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட இருவரை, எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதியன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில், முள்ளியவளை 1ஆம், 4ஆம் வட்டாரங்களைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள், நேற்று முன்தினம் (30) கைதுசெய்யப்பட்டனர்.

திடீர் சுற்றிவளைப்பு;

# நெல்லை பதுக்கிய கடைகளுக்கு சீல்

■ நூருள் ஹுதா உமர்

அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையினரால் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று மற்றும் ஒலுவில் பிரதேசங்களில் உள்ள அரிசி ஆலைகள், வர்த்தக நிலையங்கள் மீது திடீர் சுற்றிவளைப்பு, நேற்று (31) மேற்கொள்ளப்பட்டது.

பொருள்களை விற்பனை செய்யும் போது, நுகர்வோருக்கு நிபந்தனை விதிப்பது, மேலதிக கட்டணங்கள் அறவிடுவது மற்றும் பொருள்களை பதுக்கி வைப்பது தொடர்பான பொதுமக்களால் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதை அடுத்து இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பல களஞ்சியங்களில் அனுமதி பெறாமல் நெல் மூடைகள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

"அப்படியான வியாபார நிலையங்களுக்கு எச்சரிக்கை அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன், மேலும் ஒரு சில வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அம்பாறை





மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி சாலிண்ட பண்டார நவரத்ன தெரிவித்தார்.

களஞ்சியத்தில் உள்ள பல ஆயிரம் நெல் மூடைகளை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்குவதற்கு இதன்போது ஒப்புதல் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

அறிவுறுத்தல்களை மீறி

# கொண்டாடியதால் கொரோனா தொற்றியது

## கொட்டகலையில் திண்டாட்டம் தடுப்பூசி ஏற்றலும் இடைநிறுத்தம்

■ கே.சுந்தரலிங்கம்



கொட்டகலை சுகாதார பிரிவுக்குட்பட்ட சாமஸ்ட்டன் பகுதியில் 43 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டதை அடுத்து, சாமஸ்ட்டன் பகுதிக்கு தடுப்பூசி வழங்கும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாக கொட்டகலை பொதுச் சுகாதாரப் பிரிவின் பிரதேச வைத்திய உத்தியோகஸ்த்தர் வைத்தியர் கே.சுதர்சன் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் சுகாதார அறிவுறுத்தல்களை மீறி, கோயில் பூஜை, மரண சடங்கு, பூப்புனித நீராட்டு விழா ஆகியன நடைபெற்றுள்ளதாகவும் இவற்றில் பங்கேற்றவர்களில் 42 பேருக்கே கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், குறித்த தோட்டத்தில் சில லயக் குடியிருப்புக்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர், இதனால் நேற்று (31) குறித்த பகுதி மக்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையும் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது என்றார்.

எனினும், தற்போது தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை நிறுவுபெற்ற பின் அவர்களுக்கான தடுப்பூசிகள் பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சாமஸ்டன் பகுதி கடந்த ஐந்து தினங்களாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதுவரை எந்த நிவாரணமும் இந்த மக்களுக்கு வழங்கப்படாததால் இம்மக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில்

# 11,920 பேருக்கு தொற்று; 253 பேர் மரணம்

■ பி.கேதீஸ், சந்ரு, ஷங்கீதன், ரமேஸ்



நுவரெலியா மாவட்டத்தில் இதுவரையில் 11,920 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என்பதுடன், 253 பேர் தொற்றால் மரணித்துள்ளனர்.

கடந்த 24 மணி நேரத்தில் 102 பேர் தொற்றாளர்களாக இனங் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் 104 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதற்கமைய, அம்பகமுவ பகுதியில் 2,269 குடும்பங்களும் கொத்மலை பகுதியில் 1,365 குடும்பங்களும் ஹங்குரன்கெத்த பகுதியில் 1,216 குடும்பங்களும் வலப்பனை பகுதியில் 1,403 குடும்பங்களும் நுவரெலியாவில் 2,005 குடும்பங்களுமாக மொத்தமாக 8,258 குடும்பங்கள் இதுவரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கொரோனா தொற்று உறுதியானவர்களில் அதிகமானவர்கள் அம்பகமுவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்பதுடன், இதுவரையில் நுவரெலியா மாவட்டத்தில் 253 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 103 பேர் நுவரெலியாலேயே உயிரிழந்துள்ளனர்.

இது தவிர, அம்பகமுவ பகுதியில் 57 பேரும் வலப்பனை பகுதியில் 45 பேரும் கொத்மலையில் 34 பேரும் ஹங்குரன்கெத்த பகுதியில் 14 பேருமாக 253 பேர் உயிரிழந்துள்ளனர்.

மலையகத்தின் சில நகரங்களில்

# யோகட் வாங்கினால் பால்மா வாங்கலாம்

■ இரா.யோகேசன்

கடந்த பல நாள்களாக நாடு முழுவதும் பால்மா தட்டுபாடு ஏற்பட்டுள்ள நிலையில், மலையகத்தின் சில நகரங்களில் 5 யோகட் வாங்கினால் மாத்திரமே ஒரு பால்மா பெக்கட் வழங்கப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இதனால் பால்மாவை கொள்வனவு செய்வதில், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் பெரிதும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

மேலும், நாடுமுழுவதும் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு, ஒரு சில வர்த்தக நிலையங்கள் பொருள்களை அதிக விலையில் விற்பனை செய்வதாகவும் நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.



திருமண நிகழ்வில் கலந்துகொண்ட

# 15 பேர் சுய தனிமையில்

■ சுதத். எச்.எம்.ஹேவா

கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட குடாஓயா பிரதேத்திலுள்ள ஹோட்டல் ஒன்றில், தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறி, ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திருமண நிகழ்வொன்றில் கலநதுக்கொண்ட 15 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இத்திருமண ஏற்பாடுகள் நேற்று முன்தினம் (30) செய்யப்பட்டிருந்த நிலையில், 119 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு கிடைத்த தகவலுக்கமைய, திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே, குறித்த 15 பேரும் எச்சரிக்கப்பட்டு, சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வெள்ளப் பாதிப்பைக் குறைக்க

# இரத்தினபுரியில் வெள்ள தடுப்புத் திட்டம்

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்



இரத்தினபுரி பிரதேசத்தில் அடிக்கடி ஏற்படும் வெள்ளப்பெருக்குக் காரணமாக உருவாகும் அழிவுகளைத் தவிர்க்கும் நோக்கத்தில், விசேட அணைக்கட்டை, கிலீமலை பிரதேசத்தில் அமைக்க இரத்தினபுரி மாவட்ட இணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில், இரத்தினபுரி இணைப்புக் குழுக் கூட்டத் தலைவரும் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அகில சாலிய எல்லாவல ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்தார்.

இதற்கமைய, கிலீமலை பகுதியில் பாரிய அணைக்கட்டு ஒன்றை அமைத்து, Dry Drynage தொழிநுட்ப முறையில் பாரிய அணைக்கட்டு ஒன்று அமைக்க இத்திட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்துக்கிணங்க மேற்படி அணைக்கட்டில் அமைக்கப்படும் இரண்டு வான் கதவுகள் ஊடாக, பாரிய நீர்ப்பிரவாகம் கட்டுப்படுத்தப்படும்.இதனால் இரத்தினபுரி மாநகரம் துரிதமாக வெள்ளக்காடாக மாறும் துர்ப்பாக்கிய நிலை தவிர்க்கப்படும் என்றார்.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த 2022ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் ஆலோசனையாக முன்வைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஹட்டனில் கடும் சோதனை



தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ள நிலையில், ஹட்டன் நகருக்கு வரும் வாகனங்கள் நேற்று (31) காலை கடுமையாக சோதனையிடப்பட்டன. இதன்போது, உரிய அனுமதிப்பத்திரம் இன்றி பயணித்த வாகனங்கள் திருப்பி அனுப்பப்பட்டன.

(படங்கள் – எஸ்.சதிஸ்)

# சடலத்தை அடையாளம் காண உதவவும்

## பொதுமக்களை நாடியுள்ள பொலிஸார்

■ மொஹமட் ஆஸிக்

அக்குறனை நகரில் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் கடுமையாக சுகவீனமுற்ற நிலையில் வீதியில் விழுந்து கிடந்த ஒருவர், கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

எனவே, குறித்த நபரை அடையாளம் காண்பதற்கு பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த நபர், சுமார் 50 வயது மதிக்கத்தக்கவர் என்றும் இந்த ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி அக்குறனை நகரில் சுகவீனமுற்று மயங்கி விழுந்துள்ளார் என்றும் அக்குறனை பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து அந்நபர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

இந்த நபர், அக்குறனை நகரில் கூலித் தொழில் ஈடுபடுபவர் என்று கூறப்பட்ட போதும், இவர் யார் என இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனால் 3 மாதங்களாக இவரின் சடலம், கண்டி தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதால், இவர் தொடர்பில் தகவல் அறிந்தவர்கள், அவர்களுக்கு அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அறிவிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.



தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக

# ரொசட் தோட்ட மக்கள் பணிப் பகிஷ்கரிப்பு



■ இரா.சுரேஸ்குமார்

தோட்ட நிர்வாகத்துக்கு எதிராகவும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் ஹாலிஎல- ரொசட் முதலாம் பிரிவு தோட்டத் தொழிலாளர்கள், நேற்று (31) பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

தோட்ட கம்பனிகளின் வெளியார் உற்பத்தி முறையால், தொழிலாளர்களுக்கு நிலையான வருமானத்தைப் பெறமுடியாது உள்ளதுடன், தொழிலாளர்களது வேலை நாள்கள் குறைவானதாகவே காணப்படுவதாக, இம்மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆனால், தோட்ட நிர்வாகம் எவ்வித உற்பத்தி செலவுகளும் இன்றி, அதிக இலாபத்தை வெளியார் உற்பத்தி முறையால் சம்பாதித்துக் கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் இந்த அநீதிகளுக்காக, மக்கள் பிரதிநிதிகள் குரல்கொடுக்க வேண்டும் என்று பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட தோட்டத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

குப்பைகள் கொட்டப்படுவதால்

# அசுத்தமடையும் மகாவலி கங்கை

■ கே. சுந்தரலிங்கம்

ஹட்டன்- நுவரெலியா பிரதான வீதியிலுள்ள குடாஓயா கிளை ஆற்றில் குப்பைகள் கொட்டப்படுவதால், மகாவலி கங்கை அசுத்தமடைவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹட்டன்- டிக்கோயா நகரசபை பகுதியில் சேருகின்ற கழிவுகள் கொட்டும் இடமாக கடந்த காலங்களில் குடாஓயா பிரதேசம் காணப்பட்டது. இதனால் சுற்றுப்புற சூழலுக்கு பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டன.

குறிப்பாக, மகாவலி கங்கைநீர் அசுத்தமடைவதுடன், நுவரெலியாவுக்குச் செல்லும் பிரதான வீதியில் குறித்த குப்பைமேடு அமைந்திருந்தனாலும் பொது மக்கள் பல்வேறு போராட்டங்களை செய்து, குறித்த இடத்தில் குப்பை கொட்டும் செயற்பாட்டினை நிறுத்தினர்.

இந்நிலையில், பிரதேசத்தில் உள்ள ஒரு பலரும் வீதியில் செல்பவர்களும் குறித்த பாலம் அமைந்துள்ள பகுதியில் எவரும் இல்லாத நேரத்தில் குப்பைகளை வீசிவிட்டு செல்வதாகவும், இதனால் மீண்டும் சுற்றுப்புற சூலுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்தப் பகுதியில் குப்பைகளை போடுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் குப்பை போடுவதை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



# சந்ததிகளைக் காப்பாற்ற கரையோரங்களைக் கண்காணிக்குக

சில மாதங்களுக்கு முன்னர், 'சேர் ஃபெயில்' என்ற கோஷத்தை எதிரணியினர் எழுப்பிக் கொண்டிருந்தனர். அவர்கள், “சேர்” என விழித்துக் கூறியிருந்தது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைத்தான் என்பதை யாவரும் நன்கறிவர். அடிமட்டத்திலிருந்து அரசியலுக்கு வராமையால், ஒவ்வொரு செயற்பாடுகளிலும் “சேர் ஃபெயில்” என்றனர்.

இறுதி யுத்த காலகட்டத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக பதவிவகித்த கோட்டாபய ராஜபக்ஷ, சிறந்த நிர்வாகத்திறனைக் கொண்டவராக இருந்தார். அதனால்தான், பொலிஸ் உள்ளிட்ட முப்படைகளையும் ஒரு கட்டுக்கோப்புக்குள் கொண்டுவரமுடிந்தது. ஆக, இராணுவ கட்டளையிடும் நிர்வாகத்துக்கு கோட்டாபய சிறந்தவர்.

தான், ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர், சில முக்கியமான நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புகளுக்கு ஓய்வுபெற்ற படையினரை நியமித்தார், அமைச்சின் செயலாளர்களாகவும் நியமித்தார். இது, இராணுவ ஆட்சிக்கு வித்திடுகிறது, சிவில் நிர்வாகக் கட்டமைப்பு சீர்குலைந்து வருகிறது என்ற விமர்சனங்கள் சர்வதேச மட்டத்திலிருந்தும் வந்தன.

ஆனால், விமர்சனங்களுக்குப் பின்னரான உயர்பதவி நியமனங்கள் அவ்வாறே வழங்கப்பட்டன. அதுமட்டுமன்றி, மரண தண்டனைக் கைதிக்கு பொதுமன்னிப்பளித்து உயர்பதவி வழங்கப்பட்ட நிர்வாகத்திறனும் அவரிடத்திலேயே உள்ளது என்பதும் கசப்பான உண்மையாகும்.

அரசியல் கலப்படம் இல்லாத ஒருவர், நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து, ஊழல், மோசடிகள் அற்ற சிறந்த நிர்வாக ஆட்சியொன்று இடம்பெறுமென பலரும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், ஒவ்வொரு விடங்களிலும் மோசடிகள் மலிந்து கிடக்கின்றன. இறுதியில் சீனியும் கசந்தது.

மூன்றாவது அலைக்குப் பின்னர், தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் இருக்கிறது. கொழும்பு உள்ளிட்ட பெருநகரங்களுக்குச் சென்று பார்த்தால், “ஊரடங்கு” எனும் சொல்லுக்கு அகராதியில் அர்த்தத்தை தேடவேண்டிய நிலைமையே உள்ளது.

ஆக, நிர்வாகத்தை முறையாக முன்னெடுக்கமுடியவில்லை அல்லது வழங்கப்படும் ஆலோசனைகள் தவறானவையாக இருக்கின்றன. இல்லையேல், அரசியல் சாயம்பூசப்படும் தீர்மானங்களுக்கு தலை சாய்க்கவேண்டிய நிர்ப்பந்தம் ஆட்சியாளருக்கு ஏற்பட்டுள்ளது எனலாம்.

“தனிமைப்படுத்தல் ஊரடங்கு” காலத்திலேயே ஆகக்கூடுதலான சட்டவிரோதமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதில், போதைப்பொருள் கடத்தல்கள் முதலிடத்திலும், போலியான நாணயத்தாள்களை அச்சடித்தல் அதற்கடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன. இடையில், தலைக்குமேல் ஏறிநிற்கும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் உள்ளிட்டவற்றைக் குறிப்பிடலாம்.

அரைவயிறும் கால்வயிறும் உண்டு, எவ்விதமான வருமானங்களும் இன்றி, வேலைவாய்ப்புகளை இழந்து, வீடுகளுக்குள் முடங்கியிருப்பவர்களை போதைப்பொருள் காரர்களால் இலக்குவைக்கப்படலாம். பாடசாலைகள் யாவும் மூடியிருப்பதால், மாணவர்களும் இலக்காகலாம். ஆகையால், கரையோரங்களை முழுமையாகக் கண்காணித்து, நாட்டுக்குள் போதைப்பொருள் கொண்டுவரப்படுவதை உடனடியாகத் தடுக்கவேண்டும். இல்லையேல் எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கை கேள்விக்குறியாகிவிடும். என்பதை நினைவூட்டுகின்றோம்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

நாங்கள் மிகச் சின்னச்சின்ன விடயங்களில், வெற்றிபெற்றாலே போதும்; மிகவும் களிப்பு அடைகின்றோம். இத்தோடு நாங்கள் நின்றுவிடக்கூடாது.

தொடர்ந்து அதேவழியில் சற்று மேலோங்கி, விரிந்த பயணத்தில் மேல்நோக்கிச் செல்வீர்களாவீர். அப்பொழுது, நீங்களே உணராத மகா வல்லமையைப் பெற்றவர்களாயீர்.

உயர்நிலைக்கு வந்தவர்கள் உறங்குவதில்லை. சின்னத் தீப்பொறியின் வியாபகம், பெரும்தீயை உண்டுபண்ணிவிடுகின்றது. எனவே, மனம் என்பதுகூட, ஒரு தீவிரஇயங்கு சக்தி என்பதை உணர்வீர்களாக.

நல்ல விடயங்களில் மட்டும் நாட்டம், நெஞ்சத்தைக் குடையும் அல்லது, சிந்தையைச் சிதைக்கும் எதையும் மூளைக்குள் செலுத்த வேண்டாம். அமைதியாகவும் நிதானமாகவும் செய்யவேண்டிய கருமங்களில் உண்மையாகவே, ஈடுபாட்டுடன் செய்தாலே போதும், நீங்கள் நவமனிதன்தான்.

எந்தக் கவலைகளும் எமக்கு வேண்டாம். எப்படி வாழ்வை மகிழ்ச்சிகரமானதாக உருவாக்குவது என்பதிலேயே தீவிர கவனத்துடன் இருங்கள். உங்களுக்கு நீங்களே எஜமான்தான்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கொஞ்சம் கவனிக்கவும்

வவுனியா, நொச்சிமோட்டை, புதியசின்னக்குளம் வீதியில், பாலம் அமைக்கப்படாமையால், அவ்வீதியூடாகப் பயணம் செய்யும் பொதுமக்கள், பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த பகுதியில் அமைந்துள்ள நொச்சிமோட்டைக் குளம், தனது முழுக் கொள்ளவையும் எட்டியுள்ள நிலையில், குளத்தின் மேலதிக நீர், சுருங்கை வழியாக வெளியேறி, குறித்த பாதையூடாகவே வெளியேறிச் செல்கின்றது. இதன்போது, பாதையில் நான்கு அடிக்கு மேல், நீர் நிரம்பிக் காணப்படுகிறது. இவ்வீதியை பயன்படுத்தும் கிராமமக்கள், இதனால் மிகுந்த சிரமத்துக்கு மத்தியிலேயே, தமது பயணங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த பாதையை மாமடு, கள்ளிக்குளம், துவரங்குளம், சின்னப்புதுக்குளம் உட்பட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள், தினமும் பயன்படுத்தி வருகின்றனர்.

ஒவ்வொரு வருடமும், மழைகாலங்களின் போது குளம் நிறைந்தால், இந்த வீதியால் பயணிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள் கூட, இந்த பாதையூடாகப் பயணித்தே, பிரதான பாதையை அடைகின்றனர். இது தொடர்பாக, அரசியல்வாதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பலமுறை தெரியப்படுத்தியும் எவரும் இதற்கான தீர்வைப் பெற்றுதரவில்லை.

எனவே, பலவருடங்களாக நீடித்துவருகின்ற இப்பிரச்சினைக்கு, பாலம் ஒன்றை அமைத்து, தீர்வைப் பெற்றுத்தருமாறு, அதனூடாகப் பயணிக்கும் பொதுமக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

க. அகரன்


Pix வைப்பக படம்

விலவாசி உயர்வுக்குக் காரணம்

# கொரோனாவா, நிர்வாகச் சீர்கேடா?



எம்.எஸ்.எம். ஐயூப்

கொவிட் - 19 தொற்று நாட்டு மக்கள் மத்தியில் மரண பயத்தை ஏற்படுத்தியும் அந் நோய் தடுப்புக்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள பயணத் தடைகள் போன்ற நடவடிக்கைகள் மீது மக்களின் கவனம் திரும்பியும் இருக்காவிட்டால் பொருளாதார பிரச்சினைகளுக்காக ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதை தடுக்க முடியாது.

அந்தளவுக்கு மத்திய வர்க்கத்தினரும் அதற்கு கீழ் மட்டத்தினரும் இப்போது பொருளாதார ரீதியாக பெரும் நெருக்கடியை எதிர்நோக்கி வருகிறார்கள். அந்த வகையில் கொரோனா ஓரளவுக்கு அரசாங்கத்துக்கு உதவி வருகிறது.

கொவிட் தொற்றின் நிலைமை மிகவும் பயங்கரமானதாக இருக்கிறது. நோய் ஏற்பட்டால் சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக செல்ல ஒரு மருத்துவமனை இல்லாத நிலைமை உருவாகியிருக்கிறது.

மருத்துவமனைகளில் கொவிட் விடுதிகள் (வாட்டு) நிரம்பி இருக்கின்றன. மருத்துவமனைகளில் ஏற்பட்டு இருக்கும் இட நெருக்கடியின் காரணமாக நோய் ஏற்பட்டவர்கள் அதனை உரிய சுகாதார அதிகாரகளிடம் தெரிவித்தாலும் அவர்களை மருத்துவமனைகளில் உடனடியாக சேர்க்க முடியாத நிலைமை நிலவுகிறது.

கடந்த மார்ச் மாதம் முதலாவது கொவிட் நோயாளரை கண்டறிந்தலில் இருந்து சுமார் 10 நோயாளர்கள் கண்டறியப்பட்ட உடன், அதாவது ஐந்து நாட்களில் ஒரு மாதத்துக்கு நாட்டை முடக்கிய இலங்கை அரசாங்கத்தின் தலைவர்கள், இன்று நாட்டில் நாளொன்றுக்கு சுமார் 4,500 நோயாளர்கள் இனங்காணப்பட்டு, 200க்கு மேற்பட்டோர் அந்நோயால் உயிரிழக்கும் போதும் நாட்டை முடக்க முடியாது என்று கூறும் அளவுக்கு பொருளாதாரமும் மோசமாக உள்ளது.

எங்கு பார்த்தாலும் கொவிட் நோயாளர்களை காணக்கூடிய நிலைமை இருப்பதால் மக்கள் பீதியில் வாழ வேண்டியதாக உள்ளது. ஒவ்வொரு நாள் காலையிலும் பத்திரிகைகளைப் பார்த்தால் நோயாளர்களின் எண்ணிக்கையும் மரண எண்ணிக்கையுமே முக்கிய செய்திகளாக இருக்கினறன. இரவில் தொலைக் காட்சிச் செய்திகளைகப் பார்த்தலும் அதே நிலைமை தான். எனவே மக்களின் கவனம் முழுவதும் அதன் பால் ஈர்க்கப்பட்டுள்ளது. அவ்வாறில்லாவிட்டால் நாட்டின் பொருளாதார நிலைமை மிகத் தெளிவாக தெரிய வந்திருக்கும்.

கொவிட் தொற்றின் காரணமாகவும் அரச தலைவர்களின் தவறான நிர்வாக மற்றும் பொருளாதார கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் காரணமாகவும் மக்கள் இரண்டு விதமாக பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டு வருகிறார்கள். ஒரு புறம் அவர்களது வருமானம் வெகுவாக குறைந்து வருகிறது. அதேவேளை, உயரும் விலைவாசியும் மக்களை வதைத்து வருகிறது.

அரச ஊழியர்களின் சம்பளம் குறைக்கப்படாத போதிலும் அவர்களது மேலதிக நேர வேலை குறைக்கப்பட்டுள்ளது. பல ஊழியர்களுக்கு அடிப்படைய சம்பளமாக சிறியதொர் தொகையே கிடைக்கிறது. அவர்கள் மேலதிக நேர வேலையின் மூலமே ஓரளவு சமாளித்து வந்தார்கள்.

தனியார் நிறுவனங்களில் பலவற்றில் ஊழியர் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. நிரந்தரமற்ற ஊழியர்களுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் பல தனியார் நிறுவனங்களில் ஊழியர்களின் சம்பளம் 25 சதவீதம், 50 சதவீதம் என குறைக்கபப்ட்டுள்ளது. இது கடந்த வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருவதால் அவர்களின் பொருளாதாரம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

தினக்கூலித் தொழிலாளர்கள், நிரந்தரத் தொழிலற்றவர்கள், சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் அடிக்கடி நாடு முடக்கப்படவதன் மூலமும் பல்வேறு பயணக் கட்டுப்பாடுகளின் காரணமாகவும் தொழில் வழங்குநர்களின் தொழில்கள் முறையற்றதாக இருப்பதாலும் செய்வதறியாது இருக்கிறார்கள்.

கொவிட் நோயையும் வருமான வழியாக்கிக் கொண்டவர்கள் தவிர்ந்த கோடீஷ்வரர்கள் முதல் பிச்சைக்காரர் வரை சகலரினதும் வருமானம் கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் வேகமாக குறைந்து வருகிறது. எனினும் சமூகத்தின் குறிப்பிட்ட ஒரு மட்டத்துக்கு மேற்பட்டவர்களுக்கு வருமானம் குறைந்தாலும் வாழ்வது பிரச்சினையாக இல்லை. அந்த மட்டத்துக்கு குறைந்தவர்களுக்கு வாழ்க்கையே பெரும் போராட்டமாகி இருக்கிறது. இரசாயன உரத் தடையால் சில பிரதேசங்களில் விவசாயிகளும் வருமானத்தை முற்றாக இழந்துள்ளனர்.

இந்த நிலையில் தான் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி நாளுக்கு நாள் பயங்கரமாக உயர்கிறது. அரிசியின் விலை ஒரு வருடத்துக்கு முன்னர் இருந்ததைப் போல் இருமடங்காகியுள்ளது. சீனியின் விலை தற்போது 220 ரூபாயாக உயர்ந்துள்ளது. மரக்கறி விலையும் நாளுக்கு நாள் அதிகரிக்கிறது.

அவ்வாறிருக்க, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போது மக்கள் மேலும் தியாகங்களை செய்ய வேண்டி வரும் என கூறினார். அத்தோடு அரச ஊழியர்களின் அரை மாத சம்பளத்தை கொவிட் கட்டுப்பாட்டு நிதியத்துக்கு வழங்குமாறு அரசாங்கம் கேட்கப் போவதாக வதந்திகள் பரவின. ஆனால் அரசாங்கம் அதனை மறுத்தது. எனினும் தமது ஒகஸ்ட் மாத சம்பளத்தை அந்நிதியத்துக்கு அன்பளிப்புச் செய்ய அமைச்சர்கள் முடிவு செய்துள்ளனர். மக்களும் அந்நிதியத்துக்கு அன்பளிப்புக்களை வழங்கத் தூண்டுவதே இதன் நோக்கமாக இருந்திருக்கலாம்.

அமைச்சர்களால் இதனை செய்ய முடியும். ஏனெனில் அவர்கள் பொது மக்களின் பணத்தால் பராமரிக்கபப்டுகிறார்கள். அமைச்சர் ஒருவரை பராமரிக்க அரசாங்கம் மாதமொன்றுக்கு 75 இலட்சம் ரூபாய் செலவிடுவதாக அண்மையில் ஒரு செய்தியில கூறப்பட்டது.

நாட்டில் வெளிநாட்டு செலாவணித் தட்டுப்பாட்டின் காரணமாக அரசாங்கம் கடந்த வருடம் இறக்குமதிகளுக்கு கட்டுப்பாடு விதித்தது. இதனால் சில பொருட்களுக்கு சந்தையில் தட்டுப்பாடு நிலவுகிறது. அத்தோடு சில தேசிய உற்பத்திப் பொருட்களின் மூலப் பொருள்கள் இறக்குமதி தடைப்பட்டுள்ளதால் அப்பொருட்களும் சந்தையில் குறைவாகவே இருக்கிறது.

இது போன்ற காரணங்களால் அரசாங்கத்துக்கு உடனடியாக சில பொருட்களின் விலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாத நிலை ஏற்பட்டு இருக்கலாம். ஆனால் பல அத்தியாவசிப் பொருட்களின் விலைகள் அரசாங்கத்தின் நிர்வாக சீர்கேட்டின காரணமாகவும் உயர் மட்டத்தில் உள்ளவர்களின் ஊழல் காரணமாகவுமே கட்டுக்கடங்காதிருக்கிறது.

உதாரணமாக, வர்த்தகர்கள் அரிசியை பதுக்கி வைத்துக் கொண்டு இருப்பதாலேயே அதன் விலை இவ்வாறு உயர்கிறது என அரசாங்கத் தலைவர்களேகூறுகிறார்கள். இதைக் கூறிவிட்டு விலை ஏற்றத்துக்கான தமது பொறுப்பை ஏற்க மறுப்பதாக இருந்தால் நாட்டுக்கு ஓர் அரசாங்கம் தேவையா?

கிழக்கு, வட மத்திய மற்றும் வட மேல் மாகாணங்களில் பெரும்பாலான விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வது பொலன்னறுவையில் மா பெரும் அரிசி ஆலைகளை நடத்தி வரும் நான்கு வர்த்தகர்கள் என்பது பலருக்கு தெரிந்த விடயம். அவர்கள் எந்த அரசாங்கம் பதவியில் இருந்தாலும் அரச தலைவர்களின் நண்பர்களாகவே இருக்கின்றனர். சிலர் அரசியல்வாதிகளாகவும் இருக்கின்றனர்.

இவர்களது நடவடிக்கைகளை முறையாக கண்காணித்து கட்டுப்படுத்தினால் அரிசி விலை செயற்கையாக ஏறாது என்பதும் சந்தை நிலவரத்தை அறிந்த சகலருக்கும் தெரிந்த உண்மை. எனவே அரிசி விலை ஏறுவதன் இரகசியத்தையும் எவராலும் ஊகிக்க முடியும். இது நிர்வாகப் பிரச்சினையேயன்றி பொருளியல் சார்ந்த விடயம் அல்ல.

நவம்பர் மாதமளவில் 90 ரூபாய் மற்றும் 100 ரூபாய்க்கே சந்தையில் சீனி விலை இருந்தது. இந்த விலையைக் குறைப்பதாகக் கூறி அரசாங்கம் அது வரை கிலோ கிராமுக்கு 50 ரூபாவாக இருந்த சீனிக்கான தீர்வையை 25 சதமாகக் குறைத்து ஒரு கிலோ கிராம் 85 ரூபாவுக்கு விற்குமாறு வர்த்தகர்களை பணித்து வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டது. ஆனால், அந்த தீர்வை சலுகையை பெற்றுக் கொண்ட வர்ததகர்கள் வர்த்தமானியை புறக்கணித்துவிட்டு ஒரு கிலோகிராம் சீனியை 120 ரூபாவுக்கு விற்றனர். நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை இதனை தடுக்க எதனையும் செய்யவில்லை.

தீர்வை குறைக்கும் போது அரசாங்கத்தின் சில தலைவர்கள் பல ஆயிரம் தொன் சீனியை ஏற்கனவே வெளிநாடுகளில் இருந்து கப்பலில் ஏற்றியிருந்ததாக மக்கள் விடுதலை முன்னணி அம்பலப்படுத்தியது. எனவே தீர்வை குறைப்பானது சில அரசியல்வாதிகளும் சில வர்த்தகர்களும் கூட்டாக செய்த மோசடி என்றும் அதன் மூலம் அந்த வர்த்தகர்கள் 1,500 கோடி ரூபாய் மேலதிக இலாபத்தை ஈட்டிக் கொண்டதாகவும் அக் கட்சி குற்றஞ்சாட்டியது.

இந்த மோசடிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இருந்த ஒரே சட்ட ஆயுதமான மேற்கூறப்பட்ட வர்த்தமானியையும் அரசாங்கம் கடந்த ஏப்ரல் மாதம் வாபஸ் பெற்றது. இப்போது 85 ரூபாய்க்கு விற்கப்பட வேண்டிய சீனி 220 ருபாய்க்கு விற்கப்படுகிறது. அதாவது ஒரு கிலோ கிராம் சீனியால் வர்த்தகர்கள் முன்னர் பெற்றதையும் விட 140 ரூபாய் மேலதிக இலாபத்தை அடைகிறார்கள்.

இந்த விலை ஏற்றத்துக்கு சீனித் தட்டுப்பாடோ அல்லது ரூபாயின் பெறுமதி சரிவோ காரணமல்ல என்பதும் நிர்வாக சீர்கேடும் ஊழலுமே காரணம்.




## ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்றுமுன்தினம் (30) நடைபெற்ற வாராந்த அமைச்சரவை கூட்டத்தின் போது, எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானங்களில் சில...

### 01. வீசா பெறும் ஒப்பந்தம்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசுக்கும் கம்போடியா இராச்சியத்திற்கும் இடையிலான இராஜதந்திர, கடமைகள் மற்றும் சேவைகள் தொடர்பான உத்தியோகபூர்வ கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கு வீசா அனுமதிப்பத்திரம் பெறுவதிலிருந்து விடுவிப்பதற்காக இருதரப்பினர்களுக்கிடையேயான ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரின் ஒப்புதலும், வெளிவிவகார அமைச்சின் உடன்பாடும் கிடைத்துள்ளது.

### 02. நிதி ஒதுக்கீடு

அரச ஊழியர்களின் ஓய்வூதிய நன்மைகளுக்காக 2021 ஆம் ஆண்டில் 300,000 மில்லியன் ரூபாய்களை திறைசேரி செலுத்தவுள்ளதுடன், அதன்கீழ் விதவைகள், தபுதாரர் மற்றும் பெற்றோரை இழந்தவர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்காக மாத்திரம் 35,500 மில்லியன் ரூபாய்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதில் 2021 ஜூன் மாதம் 30 ஆம் திகதியளவில் 26,367 மில்லியன் ரூபாய்கள் செலவாகியுள்ளதுடன், ஆண்டின் தொடர்ந்து வரும் காலப்பகுதிக்காக 19,000 மில்லியன் ரூபாய்கள் மேலதிக நிதி அவசியமாகவுள்ளது.

விதவைகள், தபுதாரர் மற்றும் பெற்றோரை இழந்தவர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்குத் தேவையான நிதி ஓய்வூதிய திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் கீழ் 19,000 மில்லியன் ரூபாய்களை வழங்குவதற்கு அங்கிகாரம்

### 03. புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புதுப்பித்தல்

வெளிநாடொன்றில் ஏதேனுமொரு சமுத்திரவியல் தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றுக்கொண்ட கப்பலோட்டி ஒருவர், ஏதேனுமொரு வேறு அரசாங்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கப்பலில் தொழில் புரிவதற்காக, குறித்த கப்பல் பதிவு செய்யப்பட்டுள்ள அரசாங்கத்தால் அதற்குச் சமாந்தரமான சான்றிதழைப் (Certificate of Recognition) பெற்றுக்கொள்வது கட்டாயமாகும். வர்த்தக கப்பல்கள் போக்குவரத்து செயலகம் தற்போது 33 நாடுகளுடன் அவ்வாறான சான்றிதழ்களை அங்கீகரிக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளதுடன், அதன் மூலம் இலங்கையைச் சார்ந்த அதிகமான கப்பலோட்டிகளுக்கு வெளிநாட்டுக் கப்பல்களில் தொழில் புரிவதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

அதிக தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் குறித்த ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளைத் திருத்தம் செய்து புதுப்பிக்கப்பட்ட ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு இருதரப்பினருக்கிடையே உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

### 04. படகுச்சேவை வழங்குநர் சேவையைப் பெறல்

லக்விஜய மின்னுற்பத்தி நிலையத்தின் இறங்கு துறைக்கு நிலக்கரியை படகு மூலம் போக்குவரத்து செய்வதற்குப் பொருத்தமான சேவை வழங்குநர் ஒருவரை தெரிவு செய்வதற்காக போட்டி விலைமனு கோரப்பட்டுள்ளது. அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய, குறித்த சேவை வழங்கலுக்கான ஒப்பந்தத்தை M/s Shreeji Shipping Limited இற்கு வழங்குவதற்கு துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 05. ஊ.சே.நி சட்டத்தை திருத்துதல்

இந்தியாவில் பணிபுரியும் இலங்கையர்கள், இந்தியாவின் சமூகப் பாதுகாப்பு நிதியப் பங்களிப்புத் தேவைகளிலிருந்து விடுபடுவதற்கும், இலங்கையில் பணிபுரியும் இந்தியர்கள் எமது நாட்டிலுள்ள ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புத் தேவையிலிருந்து விடுவிக்கும் நோக்கில் இரு நாடுகளுக்கிடையே இருதரப்பு சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு இயலுமான வகையில் ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்காக அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் திருத்தம் செய்யப்பட்ட சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் அங்ககாரம் வழங்கப்பட்டுள்ளது. .

### 06. அக்ரஹார காப்புறுதி

2016 ஜனவரி மாதம் 01 ஆம் திகதிக்குப் பின்னர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் தமது 70 வயது வரை தற்போது நடைமுறையிலுள்ள அக்ரஹார காப்புறுதி திட்டத்தின் கீழ் நன்மைகளை பெற்றுக்கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குறித்த தினத்திற்கு முன்னர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளவர்களுக்காக குறித்த நன்மைகயைப் பெற்றுக் கொடுப்பதற்கு இயலுமான வகையில் அக்ரஹார காப்புறுதி திட்டத்தை திருத்தம் செய்வதற்காக 2020 ஜூலை மாதம் 22 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 07. பன்முகப் படிமுறைகள் வேலைத்திட்டம்

காலநிலை மாற்றங்களால் ஏற்படும் தாக்கங்களைக் குறைக்கும் பன்முகப் படிமுறைகள் வேலைத்திட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட விடயத்தலைப்புக்கமைய கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 03 படிமுறைகளின் கீழ் 434 மில்லியன் அமெரிக்க டொலர் மொத்த மதிப்பீட்டு செலவில் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக குறித்த தரப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டுள்ளது.

முதற்கட்டத்திற்கான 92 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக்கொள்வதற்காக உலக வங்கியின் கூட்டு மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியுடன் ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 08. குத்தகைய அடிப்படையில் காணி வழங்கல்

வரையறுக்கப்பட்ட அவுரா லங்கா ஹர்பல்ஸ் தனியார் கம்பனி அநுராதபுர மாவட்டத்தில் சேதன செய்கை முறையின் கீழ் ஏற்றுமதிக்கான கற்றாழை தாவர ஔடத உற்பத்தி தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்காக 'உலர் வலய கிராமிய பொருளாதார அபிவிருத்தி கற்றாழைக் கருத்திட்டம்' எனும் பெயரிலான கருத்திட்ட யோசனையை சமர்ப்பித்துள்ளது. குறித்த கருத்திட்டத்தில் கற்றாழை தாவரத்தின் வேர், கிழங்கு, திண்மக்கூழ் மற்றும் இலையின் வெளிப்பகுதிகளைப் பயன்படுத்தி அதிக சக்தி கொண்ட பானங்கள், ஔடத மாத்திரைகள், தைலங்கள், உறிஞ்சும் குளிகைகள் (Inhaler) மற்றும் தலைப்பூச்சு எண்ணெய் வகைகள் போன்ற உற்பத்திகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கருத்திட்டத்தின் மொத்த முதலீடு 783 மில்லியன் அமெரிக்க டொலர்களாவதுடன், ஆரம்ப கட்டமாக 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்வதற்கு முதலீட்டாளர் திட்டமிட்டுள்ளார். இக்கருத்திட்டத்தின் கீழ் இராஜாங்கனை மற்றும் நொச்சியாகம பிரதேச செயலகப் பிரிவுகளில் அமைந்துள்ள 2000 ஏக்கர்களில் கற்றாழை விதைக் கன்றுகள் உற்பத்திக்கான நாற்று மேடைகளை உருவாக்குவதற்கும், குறித்த நாற்று மேடைகளில் உற்பத்தி செய்யப்படும் கன்றுகளைப் பயன்படுத்தி கற்றாழைச் செய்கையை மேற்கொள்வதற்காக அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள 102,000 ஏக்கர்களைப் பயன்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்த செயற்பாடுகளுக்காக 66 ஏக்கர் வரையான காணியை அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 30 வருட நீண்டகால குத்தகை அடிப்படையில் கம்பனிக்கு வழங்குவதற்காக அமைச்சரவை அங்கிகாரம்.

---

லக்னோ

டெங்கு காய்ச்சலால்

# 32 சிறுவர்கள் உட்பட 40 பேர் பலி



உத்தரப் பிரதேசத்தின் பிரோசாபாத் மாவட்டதில் இதுவரை டெங்கு காய்ச்சலால் 32 சிறுவர்கள் உட்பட 40 பேர் உயிரிழந்திருப்பதை அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் உறுதி செய்துள்ளார்.

உத்தரப் பிரதேசத்தின் மதுரா மாவட்டத்தின் கோன் கிராமத்தில் கடந்த ஆகஸ்ட் 24 ஆம் திகதி அடையாளம் தெரியாத மர்ம காய்ச்சலுக்கு 5 குழந்தைகள் உட்பட 6 பேர் பலியாகினர். பின் மர்ம காய்ச்சலின் அறிகுறியும் டெங்குவின் அறிகுறியும் ஒன்றாக இருந்ததால், அதை டெங்கு காய்ச்சல் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

பின் மதுரா, ஆக்ரா, மற்றும் ராஜஸ்தானின் பரத்பூர் பகுதிகளில் மர்ம காய்ச்சலால் 80 பேர் வரை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தனர்.

இந்நிலையில் பிரோசாபாத் மாவட்டத்தில் மருத்துவமனைகளில் நேரில் ஆய்வு மேற்கொண்ட, முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், 'இதுவரை டெங்கு காய்ச்சலால் 32 சிறுவர்கள் உட்பட 40 பேர் பலியாகினர்.' என்றார்.

---

சென்னை

# அமெரிக்கா சென்றார் விஜயகாந்த்



மருத்துவ உயர் சிகிச்சை பெறுவதற்காக தேசிய முற்போக்கு திராவிட கழக (தே.மு.தி.க)) தலைவர் விஜயகாந்த் துபாய்ஊடாக அமெரிக்கா புறப்பட்டுள்ளார்.

தேமுதிக தலைவர் விஜயகாந்த் கடந்த சில ஆண்டுகளாக உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு, தீவிர அரசியலில் ஈடுபடாமல் இருந்து வருகிறார். கட்சியின் முக்கிய நடவடிக்கைகள் மற்றும்மற்ற கட்சிகளின் தலைவர்கள் உடனான சந்திப்பில் மட்டும் பங்கேற்று வருகிறார். அதே நேரம்,மக்கள் பிரச்சினைக்காக அறிக்கைகளை வெளியிட்டு வருகிறார்.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு, சிகிச்சைக்குப் பிறகு குணமடைந்த இவர், 25ஆம் திகதி தனது பிறந்தநாளை வீட்டிலேயே எளிமையாக கொண்டாடினார்.

தொடர் மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொண்டு சிகிச்சை பெற்று வந்த விஜயகாந்த், உயர் சிகிச்சைக்காக மீண்டும் அமெரிக்கா சென்றுள்ளார்.

சக்கர நாற்காலியில் விமான நிலையத்துக்கு வந்த விஜயகாந்த் கோட், தொப்பி அணிந்திருந்தார். அவர் நல்ல உடல்நலத்தோடு பழைய கம்பீரக் குரலோடு மீண்டும்வரவேண்டும் என கட்சித் தொண்டர்கள், அவரது ஆதரவாளர்கள் சமூக வலைதளங்களில் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

---

தருமபுரி

# 'அ.தி.மு.கவை குறை கூற தி.மு.க.வுக்கு தகுதியில்லை'



புதிய வேளாண் சட்ட விவகாரத்தில் அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தை (அ.தி.மு.க) குறைகூற திராவிட முன்னேற்ற கழகத்துக்கு (தி.மு.க) தகுதி இல்லை என்று தருமபுரியில் முன்னாள் அமைச்சர் கே.பி. அன்பழகன் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சரும், பாலக்கோடு எம் எல் ஏ-வுமான கே.பி. அன்பழகன் தருமபுரியில் செய்தியாளர்களிடம் கூறியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

புதிய வேளாண் சட்டம் தொடர்பாக தமிழக அரசாங்கம் அண்மையில் தனித் தீர்மானம் கொண்டுவந்தபோது அதிமுக வெளிநடப்பு செய்ததை திமுக-வினர் விமர்சனம் செய்து வருகின்றனர். அதிமுக தமிழக விவசாயிகளுக்கு துரோகம் செய்துள்ளது என்று திமுக அமைச்சர் தங்கம் தென்னரசு பேசியுள்ளார்.

தமிழக விவசாயிகளுக்கு திமுக வேண்டுமானால் துரோகம் இழைக்கும், அதிமுக எப்போதும் அவர்களை காக்கும் இயக்கம் என்பதை விவசாயிகள் அறிவர். வேளாண் சட்டத்தை ஆய்வு செய்து தேவையானவற்றில் மாற்றம் செய்ய வலியுறுத்தலாம் என்று கூறிய அதிமுக-வின் கருத்தை திமுக அரசாங்கம் ஏற்கவே இல்லை. வேளாண் சட்டங்களை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றி, விவசாயிகளுக்கு ஆதரவாக நிற்பது போன்று திமுக வேஷம் போடுகிறது. அதிமுக மீதும் காழ்ப்புணர்ச்சி காரணமாக தவறான கருத்தை பரப்பி வருகிறது. வேளாண் சட்ட விவகாரத்தில் அதிமுக-வை குறைகூற திமுகவுக்கு எந்த தகுதியும் இல்லை என்றார்.

---

பெங்களூர்

கட்டுப்பாட்டை இழந்த கார்

# எம்எல்ஏவின் மகன் உட்பட எழுவர் பலி



பெங்களூருவில், சொகுசு கார், மின்கம்பத்தில் மோதியதில், ஒசூர் தொகுதி எம்எல்ஏ.மகன் உள்ளிட்ட 7 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

கர்நாடக மாநிலம் கோரமங்கலா பகுதியில் கட்டுப்பாட்டை இழந்த சொகுசு கார் ஒன்று, மின்கம்பத்தில் மோதியது. இந்த சம்பவத்தில் 3 பெண்கள் உள்ளிட்ட 7 பேர் சம்பவ இடத்தில் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் ஒருவர், ஒசூர் தொகுதி எம்எல்ஏ., பிரகாஷின் மகன் கருணாசாகரும் ஒருவர் என்பது தெரியவந்துள்ளது.சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

மிகவும் விலை உயர்ந்த பாதுகாப்பான 'அவ்டி' காரில் அதிவேகமாக சென்ற கார் கட்டுபாட்டை இழந்து மின்கம்பத்தின் மீது மோதியதால் விபத்து நடந்துள்ளதாக தெரிகிறது. காரில் பயணம் செய்த 7 பேரும் சீட் பெல்ட் அணியாததால் ஏயார் பேக் செயற்படவில்லை என முதல்கட்டவிசாரணையில் தெரியவந்துள்ளது.

---

செஞ்சி

# கள்ளக்காதலனை கைது செய்ய பொலிஸார் விரைவு

குழந்தையை கொடூரமாக தாக்கி வீடியோ பதிவிட்ட வழக்கில், கைது செய்யப்பட்ட பெண்ணின் கள்ளக்காதலனை கைது செய்ய பொலிஸார் சென்னை விரைந்துள்ளனர்.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அடுத்த மணலப்பாடி மதுரா, மோட்டூர் கிராமத்தைச் சேர்ந்த கூலித் தொழிலாளியின் மனைவி இரண்டாவது குழந்தையைக் கொடூரமாக தாக்கி சித்திரவதை செய்யும் வீடியோ, சமூக வலைதளத்தில் வெளியாகி, அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

கணவன் கொடுத்த புகாரில், சத்தியமங்கலம் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். தனிப்படை பொலிஸார் , ஆந்திர மாநிலம், சித்தூர் அடுத்த ராம்பள்ளி கிராமத்தில் தாய் வீட்டில் இருந்த மனைவியை கைது செய்து, அழைத்து வந்தனர். பொலிஸார் தீவிர விசாரணை நடத்தினர். இப்பெண்ணுக்கும் சென்னையைச் சேர்ந்த ஒருவருக்கும், வீடியோ கால் மூலம் பழக்கம் ஏற்பட்டுள்ளது. இருவரும் அடிக்கடி பேசி வந்துள்ளனர். இப்பெண்ணை இரண்டாவதாக திருமணம் செய்து கொள்வதாகக் கூறியுள்ளார். இவளின் 4 வயது மூத்த மகன், மனைவியைப் போன்றும், இளைய மகன், தந்தையைப் போன்றும் இருப்பதாக புதிய காதலன் கூறியுள்ளார். எனவே, இளைய மகனை அடித்துத் துன்புறுத்தும்படி புதிய காதலன் கூறியுள்ளார்.



---

புதுச்சேரி

# முண்டியடித்த செயலாளர்கள்



புதுச்சேரி சட்டப்பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடரின் மூன்றாம் நாள் கூட்டம் நேற்று நடந்தது. அவையில் சுயேட்சை எம்எல்ஏ சிவா பேசுகையில், 'சட்டமன்ற உறுப்பினர்கள் பேசும் குறிப்புகளை, குறிப்பு எடுக்கும் அரசாங்கத்துறை செயலர் மற்றும் இயக்குநர்கள் சரியாக சட்டப்பேரவைக்கு வருவதில்லை. சட்டப்பேரவை முடியும் வரை சட்டப்பேரவை அலுவல்களை குறிப்பெடுக்க வருமாறு அழைப்பு விடுக்க வேண்டும்" எனச் சட்டப் பேரவைத் தலைவரிடம் கோரிக்கை வைத்தார். அதே கோரிக்கை தொடர்பாக சட்டப்பேரவை துணைத்தலைவர் ராஜவேலுவும் குறிப்பிட்டார்.

இதையடுத்து பேரவையில் சட்டப்பேரவைத்தலைவர் செல்வம், "அரசாங்க செயலர்கள், இயக்குநர்கள் பேரவைக்கு உடனே வரவேண்டும். சட்டப்பேரவை நடைபெறும் நாட்களில் அவர்கள் அனைவரும் பேரவையில் இருக்க வேண்டும்" என்று உத்தரவிட்டார்.

அதையடுத்து அரசாங்க செயலர்கள், இயக்குநர்கள் பலரும் பேரவைக்கு வந்தனர்.

இதனைத்தொடர்ந்து சட்டப்பேரவைத் தலைவர் செல்வம் தலைமையில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் சட்டப் பேரவை செயலர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இதுகுறித்து சட்டப் பேரவைத் தலைவர் செல்வம் கூறும்போது. " தலைமைச் செயலர் தலைமையில் அனைத்துத்துறை செயலர்களும் மற்றும் இயக்குநர்களும் சட்டப்பேரவை முடியும் வரை காலை ஒன்பது முப்பது மணிக்கு முன் வர வேண்டும். அவ்வாறு வராதவர்கள் மீது தலைமை செயலரிடம் தெரிவித்து பின்பு, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று உத்தர விடப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டார்.

---

சென்னை

பாடசாலைகள் ஆரம்பம்;

# பெற்றோர்கள் அச்சப்பட தேவையில்லை!

பாடசாலைகள் இன்று திறக்கப்படுவதை முன்னிட்டு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. மாணவர்கள், பெற்றோர்கள் அச்சப்பட தேவையில்லை என பாடசாலைக் கல்வித்துறை அமைச்சர் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

சென்னை, திருவல்லிக்கேணியில் நிருபர்களை சந்தித்த அமைச்சர் மகேஷ் பொய்யாமொழி கூறியதாவது:

கொரோனா காரணமாக அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கில் தளர்வுகள் அளிக்கும்போது, மருத்துவ நிபுணர்கள் மற்றும் பல தரப்பினரை கேட்டு முடிவு எடுப்பதை போல்,பாடசாலைகளைத் திறக்கலாம் என முதலமைச்சர் முடிவெடுத்து அறிவுரை வழங்கி உள்ளார்.எனவே,இன்று முதல் 9 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு, பாதுகாப்பான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி பாடசாலைகள் திறக்கப்பட உள்ளன.

ஆப்கானிஸ்தான்

# ஆப்கானிலிருந்து வெளியேறியது அமெரிக்கப் படை



20 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து அங்கிருக்கும் தம் நாட்டு மக்களை வெளியேற்ற பல்வேறு நாட்டு விமானங்களும், காபூல் விமானநிலையத்தில் வந்திறங்கின.

மக்களை ஏற்றிச்செல்ல இம் மாதம் 31ஆம் திகதி வரை அவர்களுக்குக் கெடு விதிக்கப்பட்டிருந்த நிலையில் காபூல் விமான நிலையத்திலிருந்து அமெரிக்காவின் கடைசி இராணுவ விமானம் நேற்றுக் கிளம்பியதாக, அந்நாட்டின் மத்திய கட்டளைத் தளபதி கென்னத் மெக்கென்சி தெரிவித்தார்.

அத்துடன்" வெளியேறுவதற்கு முன்னர் அங்குள்ள அமெரிக்காவின் 73 போர் விமானங்கள் மற்றும் நவீன ஏவுகணைத் தடுப்பு உபகரணங்கள் உள்ளிட்டவற்றைச் செயலற்றதாக்கி விட்டதாகவும் இதனால் தாலிபன்களால் அவற்றை இயக்கவும் முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் 20 ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானில் தங்கள் இராணுவம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது, தற்போது முடிவுக்கு வந்துள்ளது என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்ததோடு தம் நாட்டு இராணுவ வீரர்களுக்கு நன்றி கூறினார்.

மேலும் தலிபான்கள் பாதுகாப்பான பாதையில் உறுதிமொழிகளைச் செய்துள்ளனர். உலகநாடுகள் அவர்களை தங்கள் கடமைகளுக்குக் கட்டுப்படுத்தும். ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேற விரும்புவோருக்காக விமான நிலையத்தை மீண்டும் திறக்க தலிபான்களுடன் ஒருங்கிணைப்புடன் செயல்படுவோம் எனவும் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிலிருந்து அமெரிக்க இராணுவம் முழுமையாக வெளியேறியதால், அஃப்கானிஸ்தான் முழு சுதந்திரம் அடைந்துவிட்டதாகக் கூறி, அங்குள்ள தலிபான்கள் வானை நோக்கி துப்பாக்கியால் சுட்டு தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுளது.

## நடமாடும் இலை



இலை ஒன்று நடப்பது போன்ற வீடியோ வொன்று அண்மையில் சமூகவலைதளங்களில் வைரலாகி வருகின்றது.

இலையினால் நடக்க முடியுமா என்ற சந்தேகத்திற்கு விடை தேடிய போது அது இலை அல்ல, பூச்சி என்ற பதில் கிடைத்தது.

பார்ப்பதற்கு இலை போலவே தோற்றமளிக்கும்

இப் பூச்சி ஃபிலியம் ஜிகாண்டியம் என்ற அறிவியல் பெயரால் அழைக்கப்படுகிறது.

மேலும் இப் பூச்சியை (*leaf insect*) 'நடக்கும் இலை' என்றும் அழைக்கிறார்கள்.

நடக்க முடிந்த இப்பூச்சியால் பறக்க முடியாதென்றும், பிறக்கும்போது சிவப்பு நிறத்தில் இருந்து இலைகளை உண்டு வளரும்போதே பச்சை நிறத்துக்கு மாறுகிறது என்றும் அறியப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் ஃபிஜி தீவுகளில் இப் பூச்சிகள் அதிகம் வாழ்வதாகக் கூறப்படுகின்றது.

அமெரிக்கா

## சிங்கத்துடன் போராடி சிறுவனை மீட்ட தாய்



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம், லாஸ் ஏஞ்சல்ஸ் அருகே உள்ள கலாபசாஸ் கிராமத்தில் பெண்ணொருவர் சிங்கத்துடன் போராடிய சம்பவமொன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண்ணின் 5 வயதுடைய மகன் வீட்டிற்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்தபோது திடீரெனப் பாய்ந்து வந்த மலைச் சிங்கமொன்று அச் சிறுவனைக் கௌவி இழுத்துச் சென்றுள்ளது.

இதனைக் கண்ணுற்று அதிர்ச்சியடைந்த தாய் துணிவுடன் தன் பலத்தைத் திரட்டி அச்சிங்கத்தை கையால் ஓங்கி பலமுறை தாக்கியுள்ளார்.

இத்தாக்குதலால் நிலை குலைந்த சிங்கம், சிறுவனை விட்டுச் சென்றுள்ள நிலையில் வனப் பாதுகாவலரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளது.

பலத்த காயமடைந்த சிறுவன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றான்.

இந்நிலையில் தன் உயிரைப் பணயம் வைத்து பெற்ற மகனைச் சிங்கத்திடம் இருந்து மீட்ட தாய்க்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

ஆப்கானிஸ்தான்

## செய்தியாளரின் பின்னால் துப்பாக்கியுடன் தலிபான்கள்



ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியதிலிருந்து அங்கு பதற்றமான சூழல் நிலவிவருகின்றது.

தொலைக்காட்சி மற்றும் வானொலிகளில் இசை நிகழ்ச்சிகளுக்குத் தடை விதித்துள்ள தலிபான்கள், பெண்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளுக்கும் தடை விதித்திருக்கின்றனர்.

இதனால் அச்சத்தில் அந்நாட்டு மக்கள் உறைந்துள்ளனர்.

தொலைக்காட்சி நேரலை நிகழ்ச்சியின்போது செய்தியாளரின் பின்புறம் தலிபான்கள் இருவர் துப்பாக்கியுடன்இருப்பது போன்றவீடியோ ஒன்று சமூக வலைத் தளங்களில் பரவி வருகிறது.

ஈரானிய செய்தியாளரான- மாசிஹ் அலினேஜாட் இந்த வீடியோவை தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவேற்றியுள்ளார்.

மேலும் " இது முறையற்ற செயல், செய்தியாளரின் பின்னால் துப்பாக்கியுடன் தலிபான்கள் காட்சியளிப்பதுடன் இஸ்லாமிக் எமிரெட் (ஆப்கானிஸ்தான்) குறித்து பொதுமக்கள் கவலைகொள்ள வேண்டாம் எனக் கூற வைக்கிறார்கள்.

பெரு

## பெருவில் படகு விபத்து: 11 பேர் உயிரிழப்பு; 50 பேர் மாயம்


பெரு நாட்டிலுள்ள லோரிடோ மாகாணத்தின் அமேசான் பகுதியில் பாயும் ஹூவால்லக (*Huallaga*) ஆற்றில் இரு படகுகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 11 பேர் உயிரிழந்துள்ளதாகவும் 50 பேருக்கும் மேற்பட்டோரைக் காணவில்லை எனவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்றுள்ள இவ் விபத்தில் 11 பேரின் உடல்கள் மீட்கப்பட்டு உள்ள நிலையில் காணாமல் போனோரைத் தேடும் பணியில் மீட்புக் குழுவினர் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இஸ்லமாபாத்,

# தடுப்பூசி ஏற்றியிருந்தால் போட்டியை கண்டுக்களிக்கலாம்




நியூசிலாந்து கிரிக்கெட் அணி எதிர்வரும் செப்டம்பர் 18 ஆம் திகதி முதல் பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது.

மூன்று ஒருநாள் போட்டிகள், டி- 20 போட்டிகள் ஐந்து கொண்ட தொடரில் விளையாடுகிறது.

கொரோனா பெருந்தொற்று காலம் என்பதால், இதற்கு முன்பாக நடைபெற்ற ஜிம்பாப்வே மற்றும் தென் ஆப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலான தொடரில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பார்வையாளர்களை அனுமதிக்கவில்லை.

இந்த நிலையில், நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் 25 சதவீதம் பார்வையாளர்களை அனுமதிக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது.

தடுப்பூசி போட்டுக்கொண்ட பார்வையாளர்கள் மட்டுமே கிரிக்கெட் போட்டியை காண அனுமதிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

18 ஆண்டுகளுக்குப் பிறகு நியூசிலாந்து கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய கிரிக்கெட் வீரர் ஓய்வு



இந்திய கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரரான ஸ்டூவர்ட் பின்னி, கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர், 'நான் அனைத்துவிதமான கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுப்பெறுகிறேன். இந்தியாவுக்காக சர்வதேசப் போட்டிகளில் விளையாடியது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது. தற்போது நான் ஓய்வுபெறும் நேரம் வந்துவிட்டது' என தெரிவித்துள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமான இவர் இந்திய அணிக்காக 6 டெஸ்ட் போட்டிகளிலும், 14 ஒருநாள் போட்டிகளிலும், மூன்று 20 ஓவர் போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.

2015 ஆம் ஆண்டுக்குப்பின் இந்திய அணியில் ஸ்டூவர்ட் பின்னியால் இடம் பிடிக்க முடியவில்லை. இவர் பங்களாதேஷ் அணிக்கு எதிராக டாக்காவில் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் 4 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.பி.எல்.லில் இருந்து விலகல்:

## வாஷிங்டன் சுந்தருக்கு பதிலாக ஆகாஷ் தீப்




விரலில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக பெங்களூர் ராயல் சேலஞ்ஜர்ஸ் அணியில் இருந்து வாஷிங்டன் சுந்தர் விலகியுள்ளார். இதன் காரணமாக அமீரகத்தில் தொடர இருக்கும் ஐ.பி. எல் போட்டிகளில் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழக வீரர்

இந்திய கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான, (தமிழக வீரர்) வாஷிங்டன் சுந்தர் அண்மை காலங்களில் சிறப்பாக விளையாடி வந்தார்.

இந்திய டி-20 அணியில் தனக்கென ஒரு இடத்தை தக்க வைத்துக்கொண்ட வாஷிங்டன் சுந்தர் 2019 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இந்தியாவுக்காக அறிமுகமானார். அந்தத் தொடரில் சிறப்பாக விளையாடி வந்த அவர் இப்போது இங்கிலாந்து சென்றுள்ள இந்திய டெஸ்ட் அணியிலும் இடம்பிடித்தார்.

### விரலில் காயம்

ஆனால் இங்கிலாந்தில் நடைபெற்ற பயிற்சியின்போது வாஷிங்டன் சுந்தருக்கு விரலில் காயம் ஏற்பட்டது. அதனால் அவரால் தொடர்ந்து அணியில் நீடிக்க முடியாமல் போனது.

இந்நிலையில் அடுத்தமாதம் செப்டம்பர் மாதம் ஐக்கிய அரபு அமீரகத்தில் ஐ.பி. எல் போட்டிகள் தொடர உள்ளன. இதில் காயத்தில் இருந்து குணமடைந்து வாஷிங்டன் சுந்தர் ஆர்சிபி அணிக்காக விளையாடுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

### பங்கேற்க மாட்டார்

இந்நிலையில் காயம் இன்னும் குணமடையாததால் ஐ.பி.எல் போட்டிகளிலும் வாஷிங்டன் சுந்தர் பங்கேற்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் நடைபெற்ற ஐ.பி.எல் 2021 போட்டியில் ஆறு ஆட்டங்களில் விளையாடி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார் வாஷிங்டன் சுந்தர். 2018 இல் ஆர்சிபி அணியில் சேர்ந்த வாஷிங்டன் சுந்தர், 32 ஆட்டங்களில் விளையாடி 19 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

### ஆகாஷ் தீப் தேர்வு

சுந்தருக்குப் பதிலாக பெங்கால் வேகப்பந்து வீச்சாளர் ஆகாஷ் தீப்-ஐ ஆர்சிபி அணி தேர்வு செய்துள்ளது. ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறவுள்ள ஐ.பி.எல் 2021 போட்டிக்காக 5 புதிய வீரர்களை ஆர்சிபி அணி தேர்வு செய்துள்ளது.

டோக்கியோ:

## சாதனை



பரா ஒலிம்பிக் மகளிர் துப்பாக்கி சுடுதலில் முந்தைய உலக சாதனையை சமன் செய்த அவனி லெகரா (19 வயது), நடப்பு தொடரில் இந்தியாவுக்காக முதல் தங்கத்தை வென்றுள்ளார். அத்துடன், பரா ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையையும் வசப்படுத்தி உள்ளார்.

டோக்கியோவில் நேற்று முன்தினம் (30) காலை மகளிருக்கான 10 மீற்றர் ஏர் ரைபிள் (ஆர்2) துப்பாக்கிசுடுதல் போட்டிக்கான தகுதிச்சுற்று ஆட்டம் நடந்தது. தகுதிச்சுற்றுப் போட்டியில் அதிக புள்ளிகள் குவித்த (626 புள்ளிகள்) சாதனையுடன் சீனாவின் குயிபிங் ஜாங், உக்ரைன் வீராங்கனை இரினா செச்ட்னிக் முதல் 2 இடங்களை பிடித்தனர். .

நண்பகலில் நடந்த பைனலில் அபாரமாக செயல்பட்ட அவனி 249.6 புள்ளிகள் குவித்து முதல் இடம் பிடித்தார். அதன் மூலம் தங்கம் வென்ற அவனி முந்தைய உலக சாதனையையும் சமன் செய்தார்.

கார் விபத்து மூலம் வாழ்க்கையே மாறிப்போனாலும், ஜெய்பூரைச் சேர்ந்த அவனி டோக்கியோவில் சாதித்துக் காட்டியிருக்கிறார்.

அமெரிக்க ஓபன் டென்னிஸ்:

## தொடக்க சுற்றில் ஹாலெப் வெற்றி



நியூயோர்க், ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாமான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்க்கில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இதில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னாள் நம்பர் ஒன் வீராங்கனையான சிமோனா ஹாலெப் (ருமேனியா) 6-4, 7-6 (7-3) என்ற நேர்செட்டில் 36ஆம் நிலை வீராங்கனையான கமிலா ஜியார்ஜியை (இத்தாலி) வீழ்த்தி 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்ற ஆட்டங்களில் கார்பின் முகுருஜா (ஸ்பெயின்), கயா கனேபி (எஸ்தோனியா) ஆகியோர் வெற்றியை ருசித்தனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 01 செப்டெம்பர் 2021, இல. 8, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.